ராவிடர் வாரத்தாள் | 16 பக்கங்கள் | விலை அணு 0—1—6

போர் வாள்

ஆசிரியர்கள் :
காஞ்சி. மணிமொழியார்
இளஞ்செழியன், B.A. (Hons)

	உள்நாடு		வெளிநாடு	
ஆண்டு சந்தா	ரூ. 5 0 0	ஆண்டு சந்தா	ரூ. 6 8 0
6-மாதம்	2 8 0	6-மாதம்	3 4 0

ள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 1 | 17—9—49 சனிக்கிழமை | வீச்சு 4

ஆளவந்தார்களின் அதிசயப் போக்கு!

கோயில்களின் சொத்துக் ள வெறும் கேளிக்கைகளுக் ம் திருவிழாக்களுக்கும் மட் ப்பயன்படுத்தினால் போதாது, வற்றின் ஒரு பகுதியையே ம் நாட்டு மக்களின் கல்வி வை வளர்ப்பதற்குச் செல ட்டாக வேண்டும் என்று மைச்சர் பக்தவச்சலனார் த வாரம் பேசியிருக்கிறார். ன்று பக்தவச்சலனார் பயந்து பயந்து கூறும் இந்த உயரிய கருத்தைத்தான் திராவிடர் இயக்கம் வெளிப்படையான முறையில் நெடுங்காலமாகக் கூறிவருகிறது. ஆனால் அப்படிக் கூறிய குற்றத்திற்காகத்தான் இதே ஆட்சியினர் திராவிட இயக்கத்தவர் மீது அடக்கு முறை பாணங்களை சரமாரியாக வீசினர்—இன்றும் வீசுகின்றனர்! சிறந்த கருத்துக்களை நம்மிடமிருந்து கடன் வாங்கிக் கொள்ள மட்டும் தயாராக இருக்கும் இந்த ஆளவந்தார்கள் அதற்காக நமக்கு நன்றி செலுத்தாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருக்கக் கூடாதா? அதுதான் இல்லை. விசித்திரமான ஆட்சியாளர்கள்!! விபரீதமான போக்குடையோர்கள்!!

—

எனது முதல் பேச்சு!

[வ. பா. தாமரைக்கண்ணி]

[முதன் முதலாக மேடைமீது ஏறி நின்று பேசும்போது அப்படிப் பேசுபவரின் மனநிலை அந்த நேரத்தில் எப்படி இருக்கும்? இது ஒரு சுவையான கேள்வி. அதுவும், இனி, மேடைப் பேச்சாளராக ஆக விரும்புவோர் ஒவ்வொருவரும் தம் தம் உள்ளத்தையே அடிக்கடி கேட்டுத் திகைக்கும் கேள்வி. இந்தச் சிக்கலான கேள்விக்கு அனுபவபூர்வமான ஒரு விடை இச்சிறு கட்டுரை! கட்டுரை சிறியது; ஆனால் சுவை கெழுமியது.]

எனது முதல் மேடைப் பேச்சு 1937-ம் ஆண்டில் நிகழ்ந்தது. அப்போது எனக்கு வயது 19. அதுகாறும் நான் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல இலக்கண இலக்கியங்களைப் படித்துக்கொண்டும் இசை பயின்றுகொண்டும் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தேனே தவிர, வெளியில் வந்து பலர் முன்னிலையில் பேசும் வாய்ப்பை நான் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எப்போதாகிலும் இசையரங்குகள் நடத்துவதற்கு அழைக்கப்பட்டுப் போவேன். அவ்வளவுதான். இவ்வாறு ஒரு சுத்தப் பட்டிக்காட்டுப் பெண்ணைப்போல் நான் வளர்க்கப்பட்டதற்கு, எனது பாட்டிதான் காரணமாயிருந்தார். அவர் காலமான பிறகு எனக்குச் சிறிது பேச்சுச் சுதந்திரம் கிட்டியது. அன்றுமுதல் இன்றுகாறுமுள்ள 12 ஆண்டுகளில் நான் ஏறக்குறைய 250 கூட்டங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறேன். இல்லறத்திலீடுபட்டுள்ள என்போன்ற ஒரு பெண் விஷயத்தில் இந்த எண்ணிக்கை சற்று பெரிதுதான் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர்.

என்னுடைய முதல் பேச்சைப்பற்றி யல்லவா சொல்லத் தொடங்கினேன்? ஆம். அது 1937-ம் ஆண்டில் நிகழ்ந்தது. அப்போது இந்தி எதிர்ப்பு இயக்கம் நடந்துகொண்டிருந்தது. சென்னை பெத்துநாய்க்கன் பேட்டைச் சிவஞானம் பார்க்கில் நடைபெற விருந்த ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன். நான் அரைமனதுடன் ஒப்புக் கொண்டேன். அச்சமும் கூச்சமும் என்னைவந்து கப்பிக் கொண்டன. மேடையில் தயங்கித் தடுமாறுமவிருக்கும் பொருட்டு, 20 நிமிஷம் பேச்சொன்றை எழுதித் தயாரித்துக் கொண்டேன். மனப்பாடமும் செய்துகொண்டேன்.

தலைவர் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும், நான் மேடைமேல் ஏறினேன். பதினாயிரக் கணக்கில் கூடியிருந்த ஜனங்களைப் பார்த்தேன். என்னை ஒரு திகில்வந்து சூழ்ந்து கொண்டது. கூட்டத்திலிருந்தவர்களின் முகங்கள் தெளிவாகத் தெரியாமல் மங்கலாய்த் தோன்றின. அவர்களெல்லாம் என்னைச் சுற்றிச்சுழல்வதுபோல் இருந்தது. ஆகையால் கூட்டத்திலிருந்த ஜனங்களிடமிருந்து என் பார்வையை விலக்கி விட்டு, அப்போதுதான் பளிச்சென்று தோன்றிய ஐந்தாம் பிறைச் சந்திரன்மேல் என் கண்களை நாட்டினேன். என் அச்சம் ஒருவாறு தணிந்தது. 'தலைவரவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே' என்று தொடங்கி, நான் மனப்பாடம் செய்து வைத்ததை விரைவாக ஒப்பிக்கத் தொடங்கினேன்.

பத்து நிமிஷங்கள்தான் பேசியிருப்பேன். அப்போது, மேடைக்கருகிலிருந்த இந்தி ஆதரவாளர் ஒருவர், என்னை இடைமறித்துக் கேள்வி கேட்டார். 'இந்தியை எதிர்த்துச் சிறை சென்றவர்கள் காங்கிரஸ் தியாகிகளைப்போல் அவ்வளவு பெரிய மனிதர்களா?' என்று கேட்டார். இது நான் எதிர்பாராத ஓர் அதிர்ச்சியாகும். நான் மனப்பாடம் செய்து வைத்திருந்ததில் மீதிபாகமெல்லாம் என் மனத்தைவிட்டு ஓடியே போய்விட்டது. இதுகாறும் தண்டவாளங்களின்மேல் ஓடும் ரயிலைப் போல் சென்றுகொண்டிருந்த என்பேச்சு, உடனே ஓர் ஆகாய விமானமாகமாறி, தன்னிச்சை போல் இறக்கை கட்டிக்கொண்டு பறக்கத் தொடங்கியது. ஓர் ஆவேசம் என்னைப் பிடித்துக் கொண்டது. அப்போது ஜனங்களை நேர் முகமாகப் பார்த்தேன். முன்வந்த நடுக்கம் இப்போது வரவில்லை. இந்தி எதிர்ப்புக்காகச் சிறை சென்றவர்கள் காங்கிரஸ் தியாகிகளைவிட எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்பதை நல்ல எடுத்துக் காட்டுகளுடன் ஆணித்தரமாக விளக்கினேன். கரகோஷம் வானைப் பிளந்தது. இன்னும் ஏதேதோ பேசி என் பேச்சைச் சுருக்கமாக முடித்துக் கொண்டேன்.

நான் உட்கார்ந்ததும் என்னை மிகப் பாராட்டினார்கள். கையைப் பிடித்துக் குலுக்கினார்கள். என் பேச்சின் முற்பகுதியைவிட பிற்பகுதி மிக நன்றாகயிருந்ததென்று சொன்னார்கள். என் முதல் பேச்சு இவ்வாறு எதிர்பாராதவிதமாய் வெற்றிகரமாக முடியுமென்று நான் கனவிலும்

[11-ம் பக்கம் பார்க்க]

அந்த விசித்திர வாழ்வு!

[எழுத்தாளன்! ஆம்! அவன் ஓர் விசித்திரப் பிறவி! அவனுடைய வாழ்க்கை, மலர் தூவிய பாதையில் நடைபெறும் ஓர் இன்ப புரிப் பயணமாக இருப்பது கிடையாது. பெரும்பாலும் அது, வறுமைப் புயலிடைச் சிக்கித் தத்தளிக்கும் சின்னஞ் சிறு படகாகத்தான் இருப்பது வாடிக்கை. சில சமயங்களில் பணம், புகழ், பெயர், சிறப்பு, செல்வாக்கு இவ்வளவும் எழுத்தாளனின் காலடியில் வந்து மலைபோல் குவிவதுண்டு. ஆனால் அந்தச் "சில சமயங்கள்" எளிதில் உருவாகி விடுவதில்லை. நெடுங்காலம் வறுமைத்தணலில் அவன் வாட்டி யெடுக்கப்பட்ட பிறகுதான், அந்தச் "சிலசமயங்கள்" வருகை புரியும். அப்போதுங்கூட, அந்தச் "சில சமயங்கள்" நிலைத்து நிற்கும் என்பதற்கு ஆதாரம் ஏதும் கிடையாது. பணம் எனும் ஊன்றுகோல் எழுத்தாளர்கட்கு, சில காலம், உறுதுணையாக இருந்துவிட்டு, மீண்டும் அது மாயமாக மறைந்து விடுவதுமுண்டு. இத்தகைய விசித்திரமான வாழ்க்கை ஊஞ்சலில் ஊசலாடியவன்தான் அமெரிக்க அறிஞன் ஜாக் லண்டன்! அவனுடைய வாழ்க்கை, இங்கே, சென்னைத் தோழர் **அப்துல் காதர்** என்பவரால் சுவைபடச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அந்த விசித்திர வாழ்வு ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம். இதோ அந்தப்படப்பிடிப்பு! காணுங்கள்.]

பேனாவின் மூலமாக, தத்தமது கருத்துகளைத் தெரிவிக்கும் எழுத்தாளர் கூட்டத்தில், இருக்கும் அநேகர், தாங்கள் எழுதும் கதைகளில் காணப்படும் விறுவிறுப்பில் ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூட சொந்த வாழ்க்கையில் ரசித்திருக்க முடியாது. ஆனால், இலக்கிய உலகில் இத்தகு 'ரசனை' இடத்தைப் பெற்றுள்ள ஒரு சிலரும் உண்டு. அவர்களுள், ஒருவனெனக் குறிப்பிடப்படும் அளவுக்கு ஜாக் லண்டனின் பெயர் வருகிறது.

அமெரிக்க இலக்கிய உலகில், மிக நல்ல பெயரெடுத்த, ஜாக் லண்டனின் கதைகள் பிரபலமானதற்கு முக்கிய காரணம், அவன் உண்மையை எழுதினான். அவன் கதைகள் கற்பனையின் உருவங்களல்ல, அவனுடைய சொந்த வாழ்க்கையின் பிரதிபிம்பங்கள். ஆம்! அவன், தன்னுடைய சொந்த வாழ்க்கையில் அனுபவித்தவற்றையே கதைகளாக உருவாக்கி உலகுக்கு அளித்தான். தன் வாழ்க்கையையே பிழிந்தெடுத்து அதனையே சிறுகதையாக, நாவலாக, எழுத்தோவியமாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்து காட்டினான்.

அவன் சில சமயங்களில் ஒரு சல்லிக் காசுகூட இல்லாத 'பரம' ஏழையாக இருந்திருக்கிறான். வேறு சில சமயங்களில் ஆயிரக் கணக்கான டாலர்களில் புரண்டும் இருக்கிறான். எனவே, அவனுக்கு ஏழ்மையின் கசப்பும் தெரியும், செல்வத்தின் இனிப்பும் அவன் அறியாததல்ல!

ஜாக் லண்டன், நண்பர்களால் கூட பாராட்டப்பட முடியாத நிலையிலிருந்திருக்கிறான். பிறகு உலகப் புகழ்பெற்ற நாவலாசிரியனாகவும் ஆகி இருக்கிறான்-எனவே, அவனுக்கு இகழ்ச்சி தந்த இழிவும், "புகழ்" தந்த 'புனித'த் தன்மையும் தலைகீழ்ப்பாடம்!

ஜாக் லண்டனுடைய வாழ்க்கை அசாதியானது. அவன் பிறப்பு, வாழ்ந்த வகை, இறப்பு அனைத்துமே அலாதியானது.

ஜாக் லண்டனின் தகப்பனார் ஒரு வான சாஸ்திரி. லண்டன் கருவில் இருக்கும் பொழுது, அவன் பிறந்தால் தமக்கு ஆபத்து நேரிடும் என்று கணித்த வான சாஸ்திரி, அந்தக் கருவைக் கலைக்காமல் தன்னுடன் வாழக்கூடாது என தன் மனைவியிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். இதனால் மனம் உடைந்த வான சாஸ்திரியின் மனைவி—லண்டனின் தாய்—தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தாள். சில நண்பர்களால் அம்முயற்சி தடைசெய்யப்பட்டது. பிறகு தனியாக வாழ்க்கையில்தான் அந்த அம்மையாருக்கு, 1876 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் தேதி, ஜாக் லண்டன் பிறந்தான். லண்டன் பிறந்து எட்டு மாதங்களுக்குள், அவன் தாயார் அவனுடைய தந்தையாரிடமிருந்து விவாக விடுதலை பெற்றுக் கொண்டு, ஜான் என்பாரை மணம் செய்து கொண்டார்கள். ஜான், ஏற்கெனவே திருமணம் செய்து கொண்டிருந்து, மனைவியை இழந்தவர். முதல் மனைவியின் மூலம் ஜானுக்கு இரு குமாரத்திகள் இருந்தனர். அவர்களுள் மூத்தவளான எலிஜா என்பாளே ஜாக் லண்டனை அன்புடன் கவனித்து அருமையாக வளர்த்து வந்தாள். அவர்கள் வீட்டில் இருந்த ஜன்னி பிரன்டிஸ் என்ற நீக்ரோ அம்மையாரும் ஜாக் லண்டன் வளர்ப்பில் மிகுந்த அக்கரை செலுத்தலானார்கள்.

இளமையிலேயே வீட்டைக் காக்கும் பொறுப்பு லண்டன் தலையில் சுமத்தப் பட்டது. அவனுடைய தாயாரின் புதிய கணவனாகிய ஜானுக்கு வேலை போய்விட்டதால், பள்ளிக்கூடம் போகுமுன்பு காலையிலும், பள்ளிவிட்டு வந்தபின் மாலையிலும் பத்திரிகைகள் விற்று பணம் கொண்டு வரவேண்டிய வேலை ஜாக் லண்டனுக்கு ஏற்பட்டது. நாளடைவில், பள்ளியை விட்டு நின்றுவிட வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இளமையிலேயே, ஜாக் லண்டனுக்கு இரண்டு இணைபிரியா நண்பர்கள் ஏற்பட்டனர், இருவர் மீதும் அவன் தன் உயிரையே வைத்திருந்தான். யார் தெரியுமா அந்த நண்பர்கள்? ஒன்று, கடல்! மற்றொன்று, புத்தகங்கள்!!

ஓய்வு கிடைத்தபொழுதெல்லாம் லண்டன், தான் வசித்த ஓக்லண்ட் துறைமுகத்திற்குச் சென்று, அங்கு வந்து தங்கிநிற்கும் கப்பல்களையும், அதினின்றும் பெருமிதத்துடன்

(14-ம் பக்கம் பார்க்க)

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

...னான விளக்கம், அது வெடித்தால் நேரிடக்கூடிய நாசம் ஆகியவற்றை படம் பிடித்துக் காட்டுகின்ற தன்மைக்காக, அந்த நூல் விக்டர் ஹியூகோ தீட்டிய "லே மிஸரபிளே" போன்ற புத்தகங்களின் வரிசையிலே சேர்க்கப்படுகிறது. அந்தப் புத்தகம் தீட்டியபின், லண்டன் ஊர் திரும்பினான்.

ஊர் வந்து சேர்ந்த முப்பது நாட்களுக்குள் வேறு ஒரு புதுக் கதையைத் தீட்டி, அதில் ஒரு நாயின் மனோநிலை எப்படி மனிதனின் மனோ நிலையையும் மிஞ்சுகிறது என்பதை எழில்பட விளக்கினான். அந்தக் கதைக்காக, சாடர்டே ஈவினிங் போஸ்ட் என்ற அமெரிக்க கிழமை இதழ் லண்டனுக்கு 2000 டாலர்கள் அளித்தது.

பத்திரிகையில் அந்தக் கதை வெளிவந்து முடிந்ததும், அதைப் புத்தக உருவில் கொண்டுவர, அனுமதி தருமாறு, 2000 டாலர்களுடன், ஒரு கடிதம் வந்தது லண்டனுக்கு. சரி என்று ஒப்புக் கொண்ட லண்டன், அந்த பணத்தைக் கொண்டு, ஒரு சிறு கப்பல் வாங்கிக் கொண்டான்.

அந்த சிறு கப்பலின் தளத்தில் தான், லண்டன், இன்னொரு உலகப் பிரசித்திபெற்ற புத்தகமான "கடல் ஓநாய்" (The Sea Wolf) என்ற நூலை எழுதினான்.

இதற்கிடையில், பெஸ்ஸியையும் தன் இரு குழந்தைகளையும் விட்டுவிட்டு, பெஸ்ஸியைப் போலவே ஊர் சுற்றும் தாகம் கொண்ட சாம்ரியான் என்பவளோடு வாழ்ந்தான் லண்டன்

1904-ல் ஜப்பான்—ருஷ்ய போரின் நேரடி மேற்பார்வையாளராக இருந்த லண்டன், போர்க்களச் செய்திகளை கதைகளாக எழுதி பிரசுரத்திற்கு அனுப்பினான். போர் முடிந்து வீடு திரும்பியதும், பெஸ்ஸி விவாகரத்து கோரினாள். விவாகரத்து முடிந்த நான்காம் நாள், அமெரிக்காவில் எந்தப் புத்தகமும் விற்றிராத அளவுக்கு, லண்டனின் "கடல் ஓநாய்" விற்றிருப்பதாகச் சேதி வந்தது.

அந்த ஆண்டு இறுதியில், புரட்சிகரமான கட்டுரைகளடங்கிய "வர்க்கப் போராட்டம்" என்ற ஒரு நூலை, லண்டன் வெளியிட்டான். மறு திங்கள், ஓக்லண்ட் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டான்.

லண்டனுக்கு ஏராளமான வரும்படி வந்த பொழுதிலும், கையில் சிறிதளவு காசுகூட தங்கவில்லை. எல்லாவற்றையும், தண்ணீர் போல, வாரியிறைத்துக்கொண்டேயிருந்தான். அதைப்பற்றி, அவனே தன் புத்தகம் ஒன்றில் கூறுகிறான்: செலவு செய்யும் பழக்கம்! ஓ கடவுளே! நான் எப்பொழுதும் அதன் பலியாகவே இருப்பேன்!! ("The habit of spending money! Oh, God! I shall always be its victim!!").

வெகு விரைவில் சாம்ரியானை, லண்டன் மணம் செய்து கொண்டான். மறுபடியும் அவன் உள்ளத்தில் 'கப்பலில் உலகைச் சுற்ற வேண்டும்' என்ற புயல் அடிக்க ஆரம்பித்தது. அதற்காக, நவீன முறையில் ஒரு கப்பல் செய்ய முயன்றான், தன் வரும்படி பூராவையும் அதிலேயே போட்டான். 25,000 டாலர்களுக்கு மேல் போட்ட பிறகும், அந்தக் கப்பல் விட்ட குறை தொட்ட குறையாகவே இருந்தது. கடைசியாக, ஒரு சிலருடனும் சாம்ரியானுடனும், லண்டன், அந்தக் கப்பலில் கிளம்பினான். இரு ஆண்டுகள், அந்த ஓட்டைக்கப்பலில் உலகை வலம் வந்தான். பல நாட்டு தட்பவெப்ப நிலை, அவனுக்கு ஏற்றுக் கொள்ளாததால், அவன் உடல்நிலை கெட்டது. எனவே, ஆஸ்திரேலியாவில், 25,000 டாலர் செலவு செய்து கட்டிய கப்பலை 3000 டாலர்களுக்கு, விற்றுவிட்டு, வேறுகப்பலேறி சாம்ரியானுடன் வீடு வந்து சேர்ந்தான். வீடு வந்ததும் சேர்ந்திருந்த ஆயிரக்கணக்கான டாலர் கடனைத் தீர்க்க, எரியும் பகல் விளக்கு (Burning day light) என்ற ஒரு நாவலையும். "தி சாடர்டே ஈவினிங் போஸ்ட்" இதழுக்கு 12 சிறு கதைகளையும் ஒரு சில வாரங்களுக்குள் எழுதினான். கடனும் தீர்ந்து, பணமும் ஏராளமாகச் சேர்ந்தது. மீண்டும் நிலையான வாழ்க்கையை நடத்த எண்ணிய லண்டன், "ஓநாய் வீடு" என்ற பெயரில், ஒரு பெரிய வீடு கட்ட ஏற்பாடுகள் செய்தான். அமெரிக்காவிலேயே அது பெரிய வீடாயிருக்க வேண்டுமென்று நினைத்த லண்டன், அதற்குப்பின் தனக்கு வந்த பணம் அவ்வளவையும், அதிலேயே போட்டான்.

இப்போது, ஜாக் லண்டன், அமெரிக்காவின் மிகப் பிரபல நா[வ]லாசிரியனாகவும் அறிஞனாகவு[ம்] இருந்தான். வீட்டுக்கு வீடு, லண்டனில் பெயர் சொந்தப் பெயரா[கி] விட்டது. அவன் செய்த ஒ[வ்]வொரு சிறு செயலும், பத்திரி[கை]யில் பிரமாதமாக விளம்பரப் படு[த்]தப் பட்டது.

இப்பொழுது, மீண்டும் லண்டன் அதிகமாகக் குடிக்க ஆர[ம்]பித்தான். பல வருஷங்க[ள்] விட்டிருந்த குடியை, உல[க] சுற்றுப் பயணம் போனபோ[து] மீண்டும் ஆரம்பித்து வி[ட்]டான். ஏற்கெனவே கெட்டிருந்[த] அவனது உடல் நிலையை, மிகவு[ம்] மோசமாக்கியது, அவன் அதிகம[ா]கக் குடித்தகுடி!! மீண்டும் குடி[க்க]லான போதுதான், லண்டன் "ஜான் பார்லிகார்ன்" என்[ற] மது விலக்குப் பிரசார நாவலை எ[ழு]தினான். 1919-ல், அமெரிக்கா[வி]ல் மது விலக்குக் கொண்டு வரப்ப[ட] முக்கிய முதல் காரணமாக, அமை[ந்]தது, லண்டன் தீட்டிய "ஜான் பார்[லி] கார்ன்" என்ற நாவல்தான்.

"ஓநாய் வீடு' கட்டி முடி[க்க] 80,000 டாலர்கள் செலவாயிற்[று]. புது மனை' புகு விழா நடக்கு[ம்] நாளுக்கு முதல் நாள் இரவு, ய[ா]ரோ விஷமிகள், ஓநாய் வீட்டை[க்] கொளுத்தித் தரைமட்டமாக்[கி] விட்டனர். இதனால் லண்டனி[ன்] இதயமே உடைந்து விட்டது. ப[ல] நாட்கள், படுத்த படுக்கையா[க] இருந்தான்.

பிறகு, மீண்டும், கொஞ்ச[ம்] சுகம் பெற்றான். இப்பொழு[து] டாக்டர்கள் எவ்வளவோ சொல்[லி]யும், தன் குடியை மட்டும், லண்ட[ன்] விடவேயில்லை. இப்பொழு[து] தான் லண்டன், நிலவின் இ[டை]வெளி என்ற ("The Valle[y] of the moon") நாவ[லை]யும் The hearts of three "மூவ[ரி]ன் இதயங்கள்" என்ற சினிமா[ப்] படமும் எழுதினான்.

"மூவரின் இதயங்கள்" எழு[தி] முடித்ததும், லண்டன் கூறினான்: "இது ஒரு மகத்தான நாவல். இதோடு எனக்கு நாற்பதாண்டுகள் ஆகின்றன; ஐம்பது புத்தகங்க[ள்] எழுதியிருக்கிறேன், எழுதும் வி[ளை]யாட்டில் என்னுடைய பதின[ைந்]தாவது வருஷத்தை முடிக்கிறேன்!" ("This novel is a celebratio[n] By its completion I celebra[te]

(11-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளும் இருக்கின்றன. அவர்களுக்கோ கருப்பாயி ஒரே பெண். எனவே, இந்தச் சொத்துக்கள் அனைத்தையும் கொடுத்து மணம் செய்கிறேன் என்று கூறிவிட்டால் மறுப்புக்கு யாரும் இருக்க மாட்டார்கள். நான் முன், நீ முன் என முன்வருவார்கள்' என்று.

இன்னுமொரு கூட்டம் கூறியிருக்கும், 'நமது முன்னோர்கள் காலத்திலே, ஊமைக்கு ஊமையையும், நொண்டிக்கு நொண்டியையுந்தான்' மணஞ் செய்திருக்கிறார்கள். எனவே, அப்படியாவது செய்து விடுவார்கள்' என்று.

* * *

கண்ணன் தகப்பனார் கருப்பண்ணன் ஏழைதான். அவர் மட்டும் ஏழையல்ல; அவரின் மரபு வழியிலே பார்த்தாலுங் கூட எல்லோரும் மிக மிக ஏழைகளாகவே இருந்திருக்கிறார்கள். தரித்திரம் தாண்டவமாடும் ஏழை கருப்பண்ணனிடம், பணம், வீடு, நிலம்-இவை அனைத்தும் தந்து நம் மகனுக்கு மணமுஞ் செய்விக்கிறேன்' என்று யாராவது கூறினால், 'வேண்டாம்' என்று மறுத்து விடுவாரோ....? இந் நிலைக்கு யாரும் வராத நேரத்திலேயே அவர், நான் ஏன் இருக்க வேண்டும்?' என்று ஒரு கணமும், மறுகணம், 'நான் இறக்கவாவது? என் மகன் கண்ணனுக்குக் கலியாணம் செய்து, கண் குளிரக் கண்ட பின்னரே இறப்பேன்' என்றும் கூறிக் கொண்டேயிருப்பார்.

கண்ணன் படித்து முடித்து மண வேட்கையி லிருந்தான். ஆயினும், தங்கள் நிலைமையை அறிந்து ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை, பெற்றோர்களிடம்.

கருப்பண்ணனுக்குப் பிள்ளை கண்ணன் ஒருவன் மட்டுமல்ல; கண்ணனுக்குத் தம்பி இருவரும், தங்கை இருவரும் இருந்தனர். ஐந்து மக்களையும் வளர்க்க வேண்டுமே! எப்படியோ இருவரும் இணைந்து வளர்த்து வந்தனர்.

செல்வ முடையோர்க்கும், அஃதிலார்க்கும் பிள்ளைகள் பிறப்பதில் கூட வேற்றுமையுண்டுபோலும்.

* * *

'யாரோ வருகிறார்கள்' என்று வாயிற் பக்கமிருந்து அவள்—கருப்பண்ணன் மனைவி ஓடி வந்தாள்.

கருப்பண்ணன் எழுந்து வாயிற் பக்கம் சென்றார், வரவேற்க.

சரிகை வேட்டி, சரிகைத் துண்டு, முக்கால் கை வரைக்கும் அணிந்த வெள்ளைச் சட்டை, வழுக்கைத் தலை, கையில் ஊன்றுகோல்—இவைகளுடன் ஒய்யாரமாக ஒரு உருவம் கருப்பண்ணனை நோக்கி நெருங்கி நடந்து வந்தது.

கருப்பண்ணன் கைகூப்பி வணங்கி, வாருங்கள்—வாருங்கள் என்று கூறி வரவேற்று உள் அழைத்துச் சென்று உட்காரச் செய்தார்.

'மிகக் களைப்பாக இருக்கிறீர்? களே! ஏதாவது பருகு நீர்...'

'கொஞ்சம் நல்ல தண்ணீர் கொடுங்கள்!'

'ஏன்-மோர் தருகிறேனே'

'வேண்டாம்-வேண்டாம் தண்ணீரே போதும்'

தண்ணீர் கொடுத்துக் குடித்த பிறகு, 'போதுமா?-இல்லை-இன்னுங் கொஞ்சந்தரச் சொல்லவா?'

'போதும். போதும்!'

'நீங்கள் யார்?'

'பூங்குன்றன்'

'என்னிடம் வரக்காரணம்......?'

'சும்மா, இப்படி வந்து போகலாமென்று வந்தேன். நீர் நலந்தானே?'

'நலந்தான்!'

'என் மகள் கருப்பாயியை நும் மகன் கண்ணனுக்கு மணஞ் செய்து கொடுக்கலாம் என்பது என் விருப்பம். எனக்கு ஒரே பெண்பிள்ளைதான். எனது சொத்துக்களையெல்லாம் நும் மகனுக்கே எழுதி வைத்து விடலாம் என்பதும் என் விருப்பம். அதனாலேதான் உம்மைக் கலந்து போகலாமென்று வந்தேன்.'

'தாராளமாகச் செய்யலாம். தடையில்லை ஆனால்.....?'

'ஆனாலென்ன?'

'பெண் கருப்பா-சிவப்பா என்பதைப் பார்க்க வேண்டாமா?'

'நல்ல சிவப்புதான்! இப்பொழுதே வேண்டுமானாலும் பார்க்கலாம். வாருங்கள், என்னுடன்'

'இல்லை. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது. நாளையானால் பார்க்க வரலாம்'

'நான் நாளை வண்டியனுப்பி வைக்கிறேன். அதில் வந்து வாருங்கள். நான் போய் வருகிறேன்!'

'நல்லது! போய் வாருங்கள்'

'பூங்கோதை! நாளை கருப்பாயியைப் பார்க்கக் கருப்பண்ணன் வருகிறார். வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து வை.'

'ஆகா! கால் நொண்டியாச்சே! என்ன செய்வது.....?'

'அவர், கருப்பா-சிவப்பா என்பதைப் பார்க்கத்தான் வருகிறார். காலை எல்லாம் பார்க்க மாட்டார். எல்லாவற்றிற்கும் நாம் ஒன்று செய்ய வேண்டும்'

(9-ம் பக்கம் பார்க்க)

பலி பீடத்திலே!

— துரை —

இருட்டறையிலே இருந்துழலுவோர்முன் விளக்கொளி காட்டுவது, விவேகமா, தீதா! நோய் கொண்டோருக்கு, மருந்தூட்டுவது முறையா, தவறா? சாந்தியால் உலகம் தழைக்க வேண்டுமென்றுரைப்பது அழகா, அநீதியா!, மத ஏடுகளிலே காணப்படும் ஆபாசங்களை எடுத்து விளக்கி, மணியின் மாசு போகத் துடைப்பது போல் மார்க்க சம்பந்தமாக உள்ள மாசுகளை அறிவுக்கோல் கொண்டு துடைப்பது தானே கடமை? என்றெல்லாம் இன்று கேட்டால், "ஆம்! தடைஎன்ன? செய்யத்தான் வேண்டும். வைரம் ஜொலிக்க வேண்டுமானால் சாணை பிடிக்கத்தான் வேண்டும். வெட்டி எடுத்துச் சுத்தம் செய்து கனலிலிட்டுக் காய்ச்சி அடித்து எடுத்தால் மட்டுமே, தங்கம் தகதகவெனப் பிரகாசிக்கும்" என்று பலர், பதில் கூறுவர். மனமாரக் கூறாவிடினும், வாயார வாகிலும் கூறிடுவர். இந்த அளவு கேட்கும் உரிமையை உலகம் பெற்றது, வாயில்லாப் பூச்சிகளாக பெரும்பான்மையினர் இருந்த போது, சிலர் வந்தது வரட்டும் என்று துணிந்து, கண்டனைகளைக்கண்டு திடுக்கிடாது, தீயில்குதித்தேனும் தீட்டுவேன் திருப்பாதை என்று தீரமாகப் புகன்றலாலேயே யாகும்.

ஆமாம், ஆபாசந்தான், அறிவுக்கு ஏற்றதாகவும் இல்லை, வாதத்திற்கு நிற்காது, இருந்தாலும் ஆதிநாளிலே ஏற்பட்ட தாயிற்றே, பலப்பல காலமாக உண்மை என்று மக்கள் நம்புகின்றனரே, அந்தக் கொள்கைகளைக் காப்பாற்றக் கட்டப்பட்டுள்ள கோட்டைகள் பல உள்ளனவே, அந்தக் கோட்டைகளைச் சுற்றிக் காவல் புரிவோர் அனேகர் உள்ளனரே, அவர்களுக்குக் கேடயமாக அதிகாரம் இருக்கிறதே, நாம் என்ன செய்ய முடியும்? என்று வாதிட்டு, சமாதானம் பெற்று, ஆமைகளாக இன்றும் பலர் இருப்பது போல், எல்லோருமே இருந்து விட்டிருந்தால், கருத்து வளர்ச்சி காட்டுமிராண்டிக் காலத்தளவே இருந்திருக்குமன்றோ! மனதில் உண்மையெனக் கொண்டதைக் கூறிடுவோம், அதைத்தடுக்க எத்தனை பட்டாளங்கள் கூட்டிவரப்பட்டாலும் பயங்கொள்ளோம், என்றுரைத்த வீரர்கள், அறிவுத்துறையிலே அவ்வப்போது கிளம்பியதால் மட்டுமே, அறிவு வளர்ச்சி இவ்வளவு கிடைத்தது! ஏர் உழுத பிறகு தானே விதை தூவமுடியும்! ஏர் உழுத ஏறுகள், பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல!

நாத்தீகம் பேசினாலும், "அவன் தண்டிக்கட்டும்" என்று விட்டு விடும் அளவு, மதவாதிகள் இது காலை தமது சுருதியை இறக்கிக்கொண்டனர். ஆனால் ஆரம்பத்திலே, அவர்களின், உக்கிரம், இவ்வளவு அவ்வளவு என்று அளவிட முடியாததாகவே இருந்தது.

ஆண்டவனைப் பற்றியோ, அவனடியார்களைப் பற்றியோ, கூறப்பட்டுள்ள பல அற்புத நிகழ்ச்சிகளைப்பற்றி, இன்று அறிவாளிகள், தத்துவார்த்தமே கூறுகின்றனர். இத்தகைய தத்துவார்த்த விளக்கமும், தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக பிரிட்டிஷ் நீதி மன்றத்திலே கருதப் பட்டகாலம் உண்டு! நினைப்பிற் கெட்டாத காலத்திலல்ல! 1728-ல் நடந்தது இத்தகைய சம்பவம்.

தாமஸ் உல்ஸ்டன் என்பவர், ஆத்தீகர், கிருத்தவர், அறிவாளி, பாதிரி! அவர் நூலொன்று எழுதினார் 1726-ல். அதிலே அவர் ஏசுநாதர் செய்து காட்டியதாகக் கூறப்படும் அற்புதங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து காட்டி, அவைகளைத் தத்துவார்த்தமாகக் கொள்ளவேண்டுமே தவிர, அப்படியே நடந்தன வென்று கொள்ளக் கூடாது, அவ்விதங்கொள்வது பகுத்தறிவாகாது, அறிஞர்கள் எள்ளி நகையாடுவர்என்று விளக்கினார். வேதத்திற்கு விவேக விளக்கமுரைத்தார்! இதுதான் அவர் செய்த பெரும் பிழை!

அந்த நூலுக்கு மக்கள் பெருத்த ஆதரவளித்தனர். 30,000 பிரதிகள் விற்றன! பாதிரிகளின் உலகம் பதைத்தது! இவனோர் நாத்தீகன்! ஆண்டவனின் லீலைகளைப் பற்றிக் கேலி செய்கிறான். இழித்துப் பழித்து எழுதி மக்கள் உள்ளத்தைப் பாழ்படுததுகிறான். ஆத்தீகத்தை அழிக்கிறான். அறிவு எனும் சம்மட்டி கொண்டு மதக் கோட்டையை இடிக்கத் துணிகிறான். இவனை ஒழித்தாக வேண்டும், என்று மத ஆதீக்கக் காரர்கள் மாரடித்துக் கொண்டனர்! மதவாதியின் மதிவழியே மன்னர்கள் செல்வது முறையன்றோ! எனவே, உல்ஸ்டன் மீது வழக்குத் தொடரப் பட்டது. நீதிபதி "ஆம்! இவன் தேவ நிந்தனையே செய்தான். தண்டனைக்கு உரியவனே!" என்று தீர்ப்பளித்தார். 1729-ம் ஆண்டு மார்ச்சு மாதம், தத்துவார்த்த விளக்கம்

எழுதிய குற்றத்திற்காக தாமஸ் உல்ஸ்ட்டன், ஓராண்டு சிறைத் தண்டனையும், 100 பவுன் அபராதமும் தரப்பட்டதுடன், 2000 பவுன் சொந்த ஜாமீனும், 1000 பவுனுக்கு இருவரும், 500 பவுன் வீதம் நால்வரும் ஜாமீன் கொடுத்து, நன்னடக்கைக்கு உத்திரவாத மளிக்கவேண்டும் என்றும் இல்லையேல், ஆயுள் வரை சிறையிலே இருக்க வேண்டுமென்றும் தீர்ப்புஅளிக்கப்பட்டது! ஜாமீன் கட்டப்படவில்லை. ஆயுள்வரை சிறை கிடைத்தது, சீலத்தைப் புகுத்த, சொந்த அறிவுடன், அற்புதங்களுக்குத் தத்துவார்த்த உரை எழுதிய அறிவாளிக்கு! நாலு ஆண்டுகள் சிறையில் கிடந்து, சிறையிலேயே மாண்டார். ஏசுவைச் சிலுவையில் அறைந்தனர் ரோம் நாட்டு அதிகாரிகள்! ஏசுவின் விசுவாசிகள், செய்தது என்ன? அறிவுக் கண் கொண்டோரை, சிறையில் இடத்தயங்கினரோ! இல்லை!

1745-ம் ஆண்டிலே ஒரு யூதர் எலிசாடி பாஜ் என்பவர், தமது உயிலின்படி, 12000 பவுன் தர்மத் தொகையாக வைத்து, யூதர்களின் மார்க்கக் கொள்கையைப் பற்றிய படிப்பகம் ஏற்படுத்த வழி செய்தார், நாத்தீக போதனைக்கல்ல! ஆனால், கிருஸ்தவ மார்க்கமே அரச மார்க்கம். யூதமார்க்க போதனை அடுக்காது என்றாராம் ஹார்விக் பிரபு! 12000 பவுன் பறிமுதல் செய்யப்பட்டதாம்! கிருத்தவ மார்க்கத்தைக் காப்பாற்றுவதிலும், அவன மீது அறிவுக்கணைகள் பாய்வதைத் தடுப்பதிலும் மட்டுமல்ல, வேறு மார்க்க போதனை புரிவதைத் தடுப்பதிலும் கூட அவ்வளவு அக்கரை இருந்தது! எவ்வளவு முள்வேலி, எத்தனை சுற்றுசுவர், எவ்வளவு அகழிகள், அந்த மதக்கோட்டையைச் சுற்றி! ஏன் அவ்வளவு அச்சம்!!

புத்தகம் எழுதுவதும் வெளியிடுவதும் மட்டுமல்ல, விற்பதற்கும் தண்டனை! தாமஸ் பெயின் எனும் தீவிரவாதி எழுதிய **மனிதனின் உரிமைகள்** என்ற புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் ஒரே ஒரு பிரதி விற்ற ஒரு ஏழை புத்தக வியாபாரி மீது சட்டம் பாய்ந்தது! 1797, ஜூன் மாதம், **தாமஸ் வில்லியம்ஸ்** என்ற கிழவன் மீது கடுங்கோபங் கொண்டனர், "கேடு களையும் கழகம்" என்ற சங்கத்தினர். புத்தக வியாபாரி மீது வழக்குத் தொடுத்தனர். கழகத்தின் சார்பாக, தாமஸ் எர்ஸ்க்கைன், எனும் வழக்கறிஞர் ஆஜராகி, வாதம் புரிந்தார். கென்யான் பிரபு, நீதிபதி. அவர், இத்தகைய நிந்தனைக்காரனின் நீசப் புத்தகத்தை விற்றவனைத் தண்டிப்பதே முறை என்று கருதினார். தீர்ப்புக் கூறுவதற்கு சின்னாட்களுக்கு முன்பு, வழக்கறிஞர் எர்ஸ்க்கைன், உலவச்செல்கையிலே, ஒரு மூதாட்டி, அவரை இழுத்துக்கொண்டு போய், நோய்வாய்ப்பட்டு நொந்து கிடந்த தாமஸ் வில்லியம்ஸ் என்ற புத்தக வியாபாரியையும், அம்மைநோயால் தாக்குண்டு தவித்துக்கிடந்த அவனது மக்களையும் காட்டினாள். எர்ஸ்க்கைனின் மனம் இளகி கேடு களையும் கழகத்தாருக்கு, வழக்கை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும், இத்தகைய ஏழையினிடம் இரக்கங் காட்டுவதே கிருஸ்தவ மார்க்கமாகுமென்றும் ஒரு கடிதம் எழுதினார். கருணை! கிருஸ்தவ மார்க்கத்தின் மூலத்தை முறியடிக்கும் ஏட்டைவிற்றவனுக்கா இரக்கங்காட்டுவது, முடியாது—என்று கழகத்தார் கூறி விட்டனர். அங்ஙனமாயின், வழக்கை நடத்த நான் வாரேன்" என்றார் வழக்கறிஞர். வழக்கும் நிற்கவில்லை! நீதிச்சக்கரம் அந்த நோயாளி, நொந்த உள்ளத்தான் மீது ஓடாமலுமில்லை! ஓராண்டு சிறைத் தண்டனை தரப்பட்டது. நன்னடக்கைக்காக ஓராயிரம் பவுன் சொந்த ஜாமீன் கேட்கப்பட்டது. அந்த ஏழை ஓராயிரம் பவுனைக் கண்டதுமில்லை. ஒடிந்த உள்ளத்துடன் சிறையிலே வாடிக்கிடந்தான்.

தாமஸ் பெயின் என்பவர் எழுதிய **மனித உரிமைகள்** என்ற புத்தகத்தை விற்றதற்காக, 1817-ல் **கார்லைல்** என்ற புத்தக வியாபாரி அவர் மனைவி, அவர் குடும்பத்தினர், பிறகு அவரது நண்பர்கள், பின்னர் அவரது ஆதரவாளர்கள், ஆகியோர், 150 பேர் வரை, தண்டிக்கப் பட்டனர், கடுமையாக.

மார்க்க சம்பந்தமாக இவ்வளவுகட்டு திட்டத்தைக் காத்து ரட்சித்த பிரிட்டன், வீரர்கள் வீழ்ந்ததால் பெருகிய இரத்த ஆறு பாய்ச்சப்பட்ட, பிறகே சுதந்திர மலர் பூக்கும் பண்ணையாயிற்று! இன்று மன்னன் மணவினை இன்ன விதமாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறிடும் உரிமை அந் நாட்டு மக்கள் பெற்று உள்ளனர்.

அரசாள்வோன் ஆண்டவனின் பிம்பம். அவனைத் திருத்துவது, தண்டிப்பது ஆண்டவனின் உரிமை, மக்கள் குறுக்கிடுவது கூடாது, என்ற தத்துவத்தைப் பேசினதற்காக **முதலாம் சார்லஸ்** மன்னனைத் தூக்கு மேடைக்கு இழுத்த பிரிட்டன், இரண்டாம் ஜேம்ஸ் அரசரை, நாட்டைவிட்டே ஓடச் செய்த பிரிட்டன், முதலில், மார்க்கத் துறையிலே, சுதந்திரமாகக் கருதிடும் உரிமை கோரியோருக்கு, சூட்டுக்கோல் காட்டிற்று. அதைப் பொறுத்துக் கொண்ட வீரர்களே இன்று, அறிவு உலகில், கீர்த்தி நிரம்பியவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

—

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 1
17—9—49 சனிக்கிழமை

இன்று! இதே நேரத்தில்!

இந்த இதழ், தங்கள் மலர்க் கரங்களில் தவழும் **இன்று, இதே நேரத்தில்**, சென்னையில், பெரியாரின் விபரீதப் போக்கால் உள்ளம் நொந்து கிடக்கும் ஆயிரமாயிரம் திராவிடர் கழகத் தோழர்கள் அனைவரும் இனி என்ன செய்ய வேண்டும்—இயக்கத்தை எந்த முறையில் நடத்திச் செல்ல வேண்டும்—அதற்கு எத்தகு திட்டம் தீட்டிட வேண்டும் என்னும் மிக முக்கியமான பிரச்சினைகளைக் குறித்து, அமைதியான முறையில்—ஆனால் திடமான உறுதியுடன், ஆத்திரம் அற்ற நிலையில்—ஆனால், ஆழ்ந்த சிந்தனையின் துணையுடன், சர்வாதிகாரப் போக்கு கொண்ட தலைமைப் பீடம் நமக்குச் சிறிதும் உதவாது என்ற கருத்துடன்—ஆனால், குடியரசுக் கோட்பாடு நம் கண்ணின் மணியெனக் காக்கப்படுதல் வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், கூடிப் பேசிக் கொண்டிருக்கின்றனர் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள்.

ஒவ்வொருவரும் நம்முடைய எதிர்கால வேலைத்திட்டம் எப்படி இருத்தல் வேண்டும் என்பது பற்றிய தம்தம் உள்ளக் கருத்தை ஒளிவு மறைவு இன்றி எடுத்துக் காட்டி விவாதித்து வருகின்றனர்.

பல்வேறு வேலைத் திட்டங்கள் கமிட்டியினர் முன் வைக்கப்பட்டு, அவற்றின் சாதக பாதகங்கள் நன்றாக அலசி ஆராயப்பட்டு, எந்தத் திட்டம் மிகச் சிறந்தது என்பது பற்றிய முடிவு உருவாக்கப்பட்டு வருகிறது.

இவர் பெரியார்—எனவே இவர் கருத்தைக் கேட்டாதல் வேண்டும்! இவர் மூதறிஞர்—எனவே இவர் சொற்படி நடந்து தீரவேண்டும்! இவர் தீர்க்கதரிசி—எனவே இவர் சொல்லைத் தட்டிக் கேட்பது அடாது! இவர் மாவீரர் என்ற விருது பெற்றவர்-எனவே இவர் எண்ணத்திற்கு மாறு கூறுவது ஆகாது என்பனபோன்ற பூஜா மனோபாவம் சிறிதும் இடம் பெறா நிலையில், உயரிய ஜனநாயக முறையில், சிறந்த வகையில், விவாதம் நடைபெற்று வருகிறது.

இவர் திராவிடத் தந்தை——எனவே இவர் பேச்சே கட்டளை! இவர் நேற்று வந்து இன்று பேச்சாளி ஆனவர் எனவே இவர் முகத்தையும் பார்த்தல் ஆகாது என்னும் குருட்டு எண்ணமும் மூடப்பித்தும் இன்றி. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு என்னும் சிறந்த கருத்துப்படி. எண்ணங்கள்—ஆலோசனைகள் — கருத்துரைகள்—புது திட்டங்கள் ஆகியவை கொட்டிக் குவிக்கப்பட்டு, அதனதன் தாராதரப்படி அதற்கு சிறப்பும் நிலைமையும் அளிக்கப்பட்டு, ஆலோசனைக்கு வைக்கப்படும் திட்டங்களுள்ளே எது சீரியதொன்று என்பது கண்டறியப்பட்டு வருகிறது.

இந்தக் கூட்டத்தில் செய்யப்படும் முடிவு திராவிடர் இயக்கத்தின் எதிர் காலத்தை மட்டுமல்ல, திராவிட நாட்டின்—திராவிட மக்களின் வருங்கால வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதையே உருவாக்கத் தக்க உயர்வும் சிறப்பும் புனிதத் தன்மையும் வாய்ந்தது என்பதை நன்றாக நினைவில் இருத்திக் கொண்டுதான் ஆலோசனைக் கூட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் என்ன முடிவு செய்யப்படுகிறது என்பதைத்தான் தமிழ் நாடு மிக மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கூட்டத்தின் முடிவில் தரப்படும் கட்டளையை நிறைவேற்றி வைக்கத்தான் தமிழ் நாட்டு இளைஞர்கள் துடி துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நாடெங்கும் உள்ள கழகத் தோழர்கள் எங்கே கட்டளை ஏன் இன்னும் தாமதம் என்று கேட்டபடி இருக்கின்றனர். இந்த மகத்தான உண்மைகள் அத்தனையையும் மறந்து விடவில்லை சென்னையில் கூடி இதுபோது எதிர்காலத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் நம் தலைவர்கள்—ஆம்! நம் பகுத்தறிவுப் படைவரிசையின் முன்னணி வீரர்கள்!

இன்று, இதே நேரத்தில், நம் தலைவர்கள், நம் இயக்கத்தின் எதிர் காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர்- திட்டம் தீட்டிக் கொண்டிருக்கின்றனர்—புதிய பாதை வகுத்துக் கொண்டிருக்கின்றனர் — நாம், இனி, போக வேண்டிய வழி, நடக்க வேண்டிய முறை, ஆற்றவேண்டிய பணி, வகுக்க வேண்டிய அமைப்பு முறை இவ்

வளவையும், அவர்கள், இன்று, ஆழ்ந்த சிந்தனையுடனும் தெளிவான ஆலோசனைக்குப் பிறகும் முடிவு செய்துவிட்டு, நாளை ஞாயிறு மாலை, சென்னை ராபின்சன் பூம்பொழில் மைதானத்தில் நடைபெற விருக்கும் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் எடுத்து விளக்க இருக்கிறார்கள்..........

• எதிர்கால வேலைத் திட்டம், ஜனநாயக முறையில், அனைவரின் எண்ணத்தையும் கலந்துகொண்டு தீட்டப்படுகிறது. எனவே அது மிகச் சிறந்ததாக இருக்கும் என்பதிலே நமக்குச் சிறிதும் ஐயமில்லை.

இயக்கப்பணி, இனி, முன்னிலும் ஆயிர மடங்கு வேகத்துடன், முன்னினும் ஆயிர மடங்கு உற்சாகத்துடன், முன்னிலும் எண்ணற்ற மடங்கு களிப்புடன், திடசித்தத்துடன் நடைபெறும்—இதிலும் நமக்கு ஐயமில்லை.

மாற்றாரின் பாசறைகளில் இருந்தெல்லாம் பெரிய பெரிய பட்டாளங்கள் பிரிந்து புறப்பட்டு நம் படை வரிசையுடன் வந்துசேர்வது உறுதி இனி! நம் பகுத்தறிவுப் போர்முகாம் புதிய பலமும் புது உற்சாகமும் பெற்று பொங்கு பேரொளி வீசித் திகழ்வது உறுதி இனி! நம் இயக்கம் ஒப்பற்ற பலமும் இணையற்ற செல்வாக்கும் ஈடற்ற தூய்மையும் பெற்றுச் சிறப்புறுவது நிச்சயம் இனி!—இந்த உண்மைகளிலும் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை.

தூய்மை, நேர்மை, அஞ்சாமை, ஜனநாயகம்—இவையே நம் வருங்காலத் திட்டத்தின் அடிப்படைகள். இந்த அடிப்படைகளின் மீது எழும் கட்டிடம் உறுதியுடையதாகவும் உறுபயன் மிகுந்ததாகவும் இருந்தே தீரவேண்டும் என்பதை யார் ஐயுற முடியும்? யார் ஐயுற்றாலும் நாம் எப்படி ஐயுறமுடியும்?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

'என்ன......?'

'சேலையைக் கால் முழுதும் மறைக்கும் படியாக-தரையைக் கூட்டும் படியாகக் கட்டிவிட்டு, ஒரு இடத்தில் உட்கார வைத்து விடடால் பார்த்துவிட்டுப் போகிறார்கள். கால் எல்லாம் தெரியாது.'

'தெரிந்தால்...?'

'தெரிந்தால்தான் என்ன? பணமல்லவா வேலை செய்கிறது.'

'சரி. நீ போய் வேண்டிய ஏற்பாட்டைச் செய்'

'இப்பொழுது தான் மறைத்து விடுகிறோம். மணப்பந்தலில் இருக்கும் போது......?'

'முன்னர்க் கூட்டியே ஒப்பனை செய்து உட்காரவைத்து விடலாம்'

'நல்ல வழிதான். நான் வருகிறேன்.'

'வாருங்கள்- வாருங்கள் ஏன் இந்நேரம் ?'

'வேலைகளையெல்லாம் முடித்து வருவதற்கு இத்தனை நாழிகை ஆகி விட்டது. வேறொன்று மில்லை.'

'சரி. வாருங்கள். சிற்றுண்டி உண்ணலாம்.'

போகும் வழியில் கருப்பண்ணன் கருப்பாயியைக் கண்டார். 'நல்ல சிவப்புத்தான்' என்று உள்ளத்துட் கூறிக் கொண்டார். உணவருந்தச் சென்றார்.

பூங்கோதை பரிமாறப் பூங்குன்றனும், கருப்பண்ணனும் உண்டனர்.

'சரி.ஜாதகத்தைக் கொடுங்கள். பஞ்சாங்கக்கார ஐயரிடம் கொடுத்து நல்ல நாளுக்கு ஏற்பாடு செய்யலாம், என்றார், கருப்பண்ணன்.

'இதோ! கை கழுவிவிட்டு வந்து எடுத்துத் தருகிறேன்' என்று கூறி வினை முடிந்ததும் வந்து எடுத்துக் கொடுத்தார்.

இருவரும் கூடியே பஞ்சாங்கக்கார ஐயரிடம் சென்றனர். ஜாதகத்தைக் கொடுத்தனர். பஞ்சாங்கக்கார ஐயர்பார்த்துவிட்டு, 'ரொம்ப பேஷாருக்குன்னா, பொருத்தம். நாளைக்கே செஞ்சுடலாமே!'

'சரி, நாளைக்கே செய்து விடுவோம். எத்தனை நாழிகைக்குச் செய்யலாம்?'

'நாளைக்கு என்ன, திங்கட்கிழமையோன்னா?'

'ஆம்-ஆம்'

'திங்கட்கிழமைன்னா 7-30க்கு மேலே 9-மணிவரைதான் ராகு காலம். நீங்கோ, பத்து மணிக்கு மேலே பதினொரு மணிக்குள்ளே முகூர்த்தத்தை வைச்சிக்கிடுங்கோ.'

'சரி, நாங்கள் போய் வருகிறோம், நீங்களும் நாளை கட்டாயம் வந்து வாருங்கள்!'

திருமணம் கண்ணன்- கருப்பாயி இருவருக்கும் சிறப்பாக நடந்தது. பெற்றோர்கள் கடமை தீர்ந்து விட்டதாக

[12-ம் பக்கம் பார்க்க]

திருந்திய திருமணம்

திண்டிவனத்தையடுத்த பெரிய தச்சூர் நாராயணசாமி குமாரர் பெரியசாமிக்கும்—சாரம் சரவணன் குமாரத்தி சத்தியபாமைக்கும் 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியார் தலைமையில் 7—9—49 காலை சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. சென்னை தோழர்கள் M. S. முத்து, A. S. ராமன் இருவரும் திருந்திய திருமணம் என்பது பற்றிப் பேசினர். போர்வாள் வளர்ச்சிக்காக திருமண மக்கள் ரூ 2/- நன்கொடை வழங்கினர்.

வாழ்க்கை விளக்கம்:

அவன் இறந்தான்! ஆனால் அவள்...?

நா. அறிவழகன்

'இப்பொழுது என்னை வேண்டாம் என்று வெறுக்கிற நீங்கள் ஏன் அன்றே வேண்டாம் என்று கூறியிருக்கக் கூடாது?'

கேள்வியில் வீரமும், கோபமும் ததும்பியிருந்தன. கண்கள் நெருப்பைக் கக்கின. அடி வயிறு கொதித்தது. உள்ளம் குமுறியது

அக்கம் பக்கத்திலுள்ளோரும் கேட்டு உடன்படுத்தியிருக்கலாம். அதற்கு முன்வரவில்லை. ஏன்? நீதி நேர்மையோடிருக்கும்போது வீணாக நெறி தவறிச் செய்ய அண்மையிலுள்ளார்க்கோ சேய்மையிலுள்ளார்க்கோ தான் என்ன கவலை?

மறுமொழி தரவோ, மறுத்துக் கூறவோ வழியில்லையாகையால், அக்கேள்விக்கு விடையிறுக்க வேண்டியவனும் தலை குனிந்து நின்றான்

அவள் அறியாத்தனத்தால் கேட்டாளா என்றால், அதுவுமில்லை. இவன் தெரியாத் தனத்தால் தலை குனிந்தானா என்றால், அதுவுமில்லை பிறகு......

* * *

கண்ணன் இளைஞன்; ஆயினும் மணபருவத்திற்கு உரியவன்.

கருப்பாயி மங்கை. அந்தப் பருவத்தில் அவள் மணஞ்செய்து கொள்ள வேண்டியதும் இன்றியமையாதது தான்.

ஒத்த பருவத்திலே, ஒத்த வயதிலேதான் இருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது. ஆனால், வாழ்க்கையில்தான் ஒற்றுமையில்லை. ஒற்றுமையில்லாத காரணத்தினால்தான் அவளும் அக்கேள்வியினைக் கேட்டாள். கேள்வி எழக்காரணம் அவர்களிருவருமா என்றால், அவர்களிருவருமல்ல; பிறர்.

பிறரால் கருப்பாயி கேட்க வேண்டிய காரணம்.....?

காரணம் இன்றைய சில தமிழினத்தவரின் தவறான எண்ணத்தால் ஏற்பட்டது.

'கருப்பாயி! நீ கண்ணனை விரும்புகிறாயா?'

'கண்ணா! நீ கருப்பாயியை விரும்புகிறாயா?'

இவ்விரு கேள்விகளையும், அவ்விருவரின் பெற்றோர்களும் அவர்களைக் கேட்டிருந்தால் இந்தத் தொல்லையில்லை. கருப்பாயியுங்கூட அவ்வளவு கோபமாகக் கேட்டிருக்க மாட்டாள்.

'எனக்கு மனைவியைத் தேட நீங்கள் யார்?'

'எனக்குக் கணவனைத் தேட நீங்கள் யார்?'

என்று இவர்களும் தனித்தனியாக இவர்களின் பெற்றோர்களைக் கேட்டிருந்தாலுங் கூட இந்நிலை ஏற்படப் போவதில்லை.

ஏற்பட்டதற்குக் காரணம் இரண்டு: ஒன்று, மணமக்கள் தம் மனக்கோளுணர்ந்து மணவினை முடிக்காதது. மற்றொன்று பண ஆசை.

* * *

பூங்குன்றனாருக்கு ஒரே பெண். அவளும் பிறவியிலேயே நொண்டி. அவள்தான் கருப்பாயி.

பொருளாதாரம் மிக்கவர் பூங்குன்றனார். அவர் குணத்திற்கு ஏற்றவளாக அமைந்தாள் அவர் மனைவி பூங்கோதை. இருவரும் நீண்ட நாட்களாக முயன்றும் மகப்பேறு இல்லாது போகவே, காசி, இராமேசுவரம் முதலிய 'திருத்தலங்களுக்கு'ச் சென்று பிள்ளைப் பேறு வேண்டித் திரும்பி வந்த பத்து—அல்லது— பன்னிரண்டு மாதங்கட்குப் பின்னர்தான் கருப்பாயி பிறந்தாள்.

கடவுள் தந்த பிள்ளைப் பேறால்தான் கருப்பாயி நொண்டியாகப் பிறந்தாளோ என்னவோ தெரியவில்லை.

வாழ்ந்த காலத்திலே, பூங்குன்றன், வீட்டுத் திண்ணையிலேயும், பூங்கோதை உள்ளறைக்குள்ளும் உறைந்து உறங்கிய காரணத்தினாலேதான் காசி, இராமேசுவரக் கடவுளிடம் பிள்ளைப் பேறு பெறப் போயிருக்க வேண்டும்.

'கோயில்கள் எல்லாம் விபசார விடுதிகள்' என்று காந்தியார் சொன்னதிலும் தவறில்லை தான்.

'கருப்பாயி பிறந்து விட்டாள் நொண்டியாக' என்று கவலைப்படவில்லை, பெற்றோர்கள். 'கலியாணம் செய்து வைக்க வேண்டும்' என்பதுதான் அவர்களின் பெருங் கவலையாக இருந்தது.

செல்வ நிறைவால், 'பெற்று விட்டோம்; பிறந்து விட்டாள் ஊனமாக. ஆயினும் வளர்க்கும் பணியில் சிறிதும் தவறக் கூடாது. அது நம் கடமை' என்ற எண்ணம் எழச், செல்வமாக வளர்த்து வந்தார்கள்; மங்கைப் பருவம்-அதுதான் மணப் பருவம் வரை.

* * *

ஊரார் பேசித்தானிருப்பார்கள், 'யார்தான் இவளை மணந்து கொள்ளப் போகிறார்கள்' என்று.

அந்த ஊரிலும் ஒரு கூட்டம் சொல்லியிருக்கும், 'பணம் நிரம்ப இருக்கிறது. நிலங்களும்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

my 40th birth day, my 50th book, andmy 16th year in the writing game!")

1916, ஜனவரியில், ஹாவாய் தீவிற்கு ஓய்வெடுத்துக்கொள்ள லண்டன் சாம்ரியானுடன் சென்றான். ஹவாயிலிருந்து திரும்பியதும் உடல் நிலை மிகவும் மோசமானது. அவன் உடல் முழுவதும் பற்றி எறிவது போல இருந்ததாம் இதற்குக் காரணம், ஓயாத குடிதான், என்று டாக்டர்கள் கூறினார்,

இந்த "பற்றி எரிதல்" பல நாட்கள் நீடித்தன. தனக்கு பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது என்றும், அப்படி பைத்தியம் பிடித்து விட்டால், தன்னை ஆஸ்பத்திரியில் சேர்க்கக் கூடாது என்றும் தன் மனைவியை லண்டன், பலமுறை,, கெஞ்சினுனை.

கடைசியில் 1916 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாள், புதன், மாலையில், மறைந்தான். லண்டன்.

இறப்பதற்கு முன்பு அவன் பட்ட 'நரக' வேதனையிலும் கூட— இறப்பதற்கு முதல் நாள்—"பழைய காலத்து ஆர்கஸைப் போல!" "அரசிளங்குமாரி" என்ற இரு சிறு கதைகளை எழுதினுன். அந்த இரு கதைகளும் அவனுடைய முதல் கதையான, 'ஜப்பானியக் கடற்கரையில்!" பெற்ற ஸ்தானத்தையே, அமெரிக்க இலக்கியத்தில் பெற்றன.

அவனது மரணப் படுக்கையில், எலிஜா என்ற உறவினனும், மனைவி சாம்ரியானும்தான் இருந்தனர்.

சிறு கதைகளின் மூலமே, மகத்தான புரட்சிக் கருத்துக்களை அமெரிக்காவில் தூவிய ஜாக்லண்டன் இறந்ததை, பத்திரிகைகள், அதற்கு முன் நாள் இறந்து போன ஆஸ்திரிய மன்னருக்குக் கொடுத்ததை விட அதிகமான விளம்பரத்துடன் பிரசுரித்தன.

அன்று மாலை, புகழ் பெற்ற அமெரிக்க மாது. ஹாதர்பர் பாங்க் அம்மையார், சிரித்து விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களைப் பார்த்து, "சிரிக்காதீர்கள்! ஜாக் லண்டன் இறந்து விட்டார்!" என்றுர்களாம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைக்கவில்லை. என்னைக் கேள்வி கேட்டவர் முதலில் ஏதோ எனக்குத் துன்பம் செய்பவர் போல் தோன்றினுர். ஆனுல் அவர்தான் எனக்குப் பேருபகாரம் செய்தவராவார். அந்தப் புண்ணியவானை இன்றுங் கூட வாழ்த்துகிறேன். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்னும் பாரதியாரின் வாக்கு என் விஷயத்தில் முற்றும் பலித்தது. இதைப் பேச்சாளர்களெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

என்னுடைய முதல் பேச்சைப்பற்றிய அனுபவத்தை முடிக்குமுன், அப்போது நடந்த ஒரு சிறு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடவிரும்புகிறேன். அன்று என் பேச்சின் ஆரம்பத்தில் மேடைக்கருகிலிருந்த என் வயதொத்த தோழிமார் சிலர் என்னைக்கண்டு, கண் சிமிட்டித் தங்களுக்குள் குசுகுசுவென்று பேசிச் சிரிப்பதாக எனக்குத் தெரிந்தது. அவர்களெல்லாரும் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் படிக்கும் மாணவிகள். சிரித்த காரணம் என்னவென்று பிறகு அவர்களைக் கேட்டேன். அவர்கள் அதைச் சொன்னபோது, எனக்குநியாயமாகத்தான் பட்டது. வெட்கமும் அடைந்தேன்.

அதாவது, நான் அப்போதெல்லாம் வீட்டைவிட்டு வெளியில் செல்வதென்றுல், நன்றுக நகைகளால் அலங்கரித்துக் கொண்டு, உயர்ந்த பட்டாடை அல்லது பொன் ஆடை உடுத்திக்கொண்டு, கூந்தலில் நிரம்ப பூவைத்துக்கொண்டு போவது வழக்கம். அதுபோலவே இந்தக் கூட்டத்துக்கும் ஒப்பனை செய்துகொண்டு போனேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானுல் பாத நாட்டிய அரங்கேற்றத்திற்குச் செல்லும் ஒரு பெண்போல் அன்று அலங்கரித்துக்கொண்டு சென்றேன். ஒரு பொதுக்கூட்டத்தில் இப்படி அலங்கரித்துக்கொண்டு வந்தால் யாருக்குத்தான் சிரிப்பு வராது. இந்தத் தவறை என் தோழியர் எடுத்துக் காட்டியபோதுதான் நான் உணர்ந்தேன். அதற்குப் பிறகு எந்தப் பொதுக் கூட்டங்களுக்குப் பேசச் செல்வதாயினும், தூய—எளிய உடையிலேதான் செல்வது வழக்கம்.......

சுவையான கதைப் புத்தகங்கள்!

★

ஏ. வி. பி. ஆசைத் தம்பி எழுதிய
அன்பழகன் ஆட்சி
விலை 1 4 0

வல்லிக்கண்ணன் எழுதிய
ஒய்யாரி
விலை 8 அணு

மு. கருணுநிதி எழுதிய
சங்கிலிச்சாமி
விலை 8 அணு

★

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனும். ரூ. 2-4-0 M. O. செய்வோருக்கு 3 புத்தகங்களையும் ரி-தபாலில் அனுப்பப்படும்.

★

கிடைக்குமிடம்:

எம். சூரி
14-ஏ, குப்பையர் தெரு,
சென்னை 1.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

எண்ணிப் பெருமூச்சு விட்டனர்.

அன்று இரவு.

படுக்கையறை. ஒரே இருட்டு. ஆனாலும் ஒரு சிறு ஒளி மட்டும் தெரிந்து கொண்டிருந்தது. ஆம்! அவ்வொளியும் சிறு சுடர் விளக்கினால் தானே!

அவ்வறையை நோக்கி நொண்டி, நொண்டி ஒரு உருவம் நடந்து சென்றது.

அதனைப் பின் தொடர்ந்து ஒரு உருவம் நடந்து சென்றது. அவ்வளவுதான்! கதவுகள் அடைபட்டன. அமைதியான இடத்தில், அடைபட்ட கதவின் தாழ்த் துளை வழிக் கேட்ட சொற்கள் இவைகள் தாம்.

முதலில் சிறிது நேரம் இருவரிடையேயும் பேச்சே யில்லை. முதல் நாள் கூட்டந் தானே! நாணம் மிக்கது போலும்!

பிறகு,

'ஏன் நிற்கிறாய்? உட்காரு!'

உட்கார்ந்த சிறிது நேரத்திற்குப்பின், ஏன் 'கால்' சுளுக்கோ?'

'இல்லை'

'பிறகு ஏன் வரும்போது நொண்டி நடந்து வந்தாய்?'

'நான் பிறவியிலேயே நொண்டி.'

'நொ...ண்...டி, ஆ! நொண்டியையா நான் மணந்து கொள்ள வேண்டும்?'

'உடன்பட்டுத்தானே செய்து கொண்டீர்கள்'

'நான் உடன்பட்டா?'

'நீங்களோ உங்கள் பெற்றோரோ- அது [illegible]னக்குத் தெரியாது.'

'நான் உடன்படவில்லை. பணவெறி பிடித்[illegible]னது பெற்றோர்கள் [illegible]அ[illegible]தற்காக ஆசைப்பட்டு உடன்பட்டிருப்பார்கள்'

'சரி. விடுங்கள் நடந்தது நடந்து விட்டது'

'நடந்தது நடந்தது விட்டது சீச்சீ! வேண்டாம். நீ வேண்டாம். நீ எனக்கு வாழ்க்கைத் துணைவியாக வேண்டாம்!.

'இப்பொழுது வேண்டாம் என்று கூறுகிற நீங்கள் ஏன் அன்றே வேண்டாம் என்று கூறியிருக்கக் கூடாது?'

'ஆம்! உன் கேள்வியிலும் தவறில்லை.'

'குற்றமில்லாதபோது என்னுடன் வாழ்ந்தால் என்ன?'

'நீ நொண்டி. நீ நொண்டி வேண்டாம்' என்றவாறே விழுந்த ஒலி கேட்டது. சிறி நேரத்திற்குள் ஆ போயிற்று. இறந்தான்.

அவன் அடைய முடியா இன்பத்தை அடைந்து விட லாம் என்ற மகிழ்ச்சியி தான் சென்றான். அவளு அப்படித்தான். இருவரு இன்பம் அடையவில்லை அவன் இறந்தான். அவளு இறந்த மாதிரிதான். ஆனாலும் அவள் நொண்டி, கால் மட்டு மல்ல; வாழ்விலுங் கூட தான்!

திராவிடர் இயக்கப்

பொதுக்கூட்டம்

திராவிடத்தின் எதிர்கால வேலைத்திட்டம் பற்றி

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில்

தோழர்கள்:

பாரதிதாசன்	N. ஜீவரத்தினம்
K.K. நீலமேகம்	C. P. சின்னராஜா
C. N. அண்ணாத்துரை	K. அன்பழகன்
A. V. P. ஆசைத்தம்பி	M. கருணாநிதி
K. V. K. சாமி	தங்கப்பழம்
A. சித்தையன்	E. V. A. வள்ளிமுத்து
பராங்குசம்	மதுரைமுத்து
E. V. K. சம்பத்	N. M. சுப்ரமண்யம்
S. R. சுப்ரமண்யம்	C. D. T. அரசு
N. V. நடராஜன்	மணிமொழியார்
காஞ்சி. கல்யாணசுந்தரம்	சத்தியவாணிமுத்து
R. நெடுஞ்செழியன்	K. A. மதியழகன்
M. K. T. சுப்பிரமணியம்	முருகு. சுப்ரமண்யம்
T. K. சினிவாசன்	M. S. மொய்தீன்

ஆகியோர் பேசுவார்கள்

இடம்:—சென்னை ராயபுரம் ராபின்ஸன் பார்க்.

காலம்:—18—9—49 ஞாயிறு மாலை 4-மணிக்கு

K. கோவிந்தசாமி, அமைப்பாள

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எழுதி வந்தான். வயிறு நிறைய சாப்பாட்டிற்கு அது வழி வகுத்தது. இப்பொழுது லண்டனுக்கு வயது 23! ஆம், 23 தான் அவன் வயது.

தானும் ஒரு எழுத்தாளனாக முடியும், என்பது நிரூபிக்கப்பட்டதைக் கண்ட லண்டன் ஒரு முழு நாவல் எழுதினான்.

அப்பொழுது அமெரிக்காவிலேயே மிகப் பிரபலமாயிருந்தது, "அட்லாண்டிக் மாதவெளியீடு" என்ற ஒரு பத்திரிகைதான். அது உலகப்பிரசித்திபெற்ற ஆசிரியர்களின் கதை, கட்டுரைகளைத்தான் வெளியிடுவது வழக்கம். ஏதோ, ஒரு அசட்டுத்தைரியத்தில், லண்டன், தான் எழுதிய நாவலை, அட்லாண்டிக் மாதவெளியீடிற்கு அனுப்பிவைத்தான். திரும்பி வரப்போகிறது, தான் எழுதிய நாவல் என்று நினைத்துக் கொண்டிருந்த லண்டனுக்கு, அந்த இதழின் ஆசிரியரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில், அவர், லண்டனுடைய எழுத்துத்திறமையைப் பாராட்டி விட்டு, அதை பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்வதாகவும், அதற்காக 120 டாலர்களை அனுப்புவதாகவும், எழுதியிருந்தார். அந்தக்கடிதத்தைப் படித்து விட்டு லண்டன், தன் தாயாரைத் தூக்கிக்கொண்டு குதித்தானாம், அம்மா! இனி மேல் தோல்வியே கிடையாது! என்றுகத்திக்கொண்டே! அதற்கு மறுநாளே, அட்லாண்டிக் மாத வெளியீட்டைச் சார்ந்த ஹப்டன் மிப்ளின் என்பார், லண்டனுடைய சிறுகதைத் தொகுதி ஒன்றை புத்தக உருவில் கொண்டு வர ஒத்துக்கொண்டார் — லண்டன் 'புது' லண்டனானான்!

துயரம் நிறைந்த 19-ம் நூற்றாண்டு முடிந்தது. நம்பிக்கையுள்ள 20-ம் நூற்றாண்டு தொடங்கியது. அமெரிக்காவுக்குமட்டுமல்ல, ஜாக்லண்டனுக்கும் ஒரு புதிய நம்பிக்கை நட்சத்திரம் தென்பட்டது. இருபதாம் நூற்றாண்டை இன்பமயமாக ஆரம்பிக்க எண்ணிய லண்டன், மேபிளை மணம் செய்துகொள்ள அவளுடைய பெற்றோர்களின் அனுமதியை நாடினான். லண்டனுடைய புது நாவல், அவர்களை ஓரளவு சம்மதிக்கச் செய்தது, இந்தத் திருமண ஏற்பாட்டைப்பற்றிய பேச்சு நடந்து கொண்டிருக்கும்பொழுதே லண்டனுடைய நண்பனான பிரெட் ஜாகெப்ஸ் என்பவன் இறந்துவிட்டான். அவனுடைய மனைவியான **பெஸ்ஸி மாடர்ன்** என்ற அழகுமிக்க மங்கையைத் தேற்றுவதற்காக பல தடவை, இறந்த ஜாகெப்சின் வீட்டிற்கு, லண்டன் செல்ல வேண்டி நேரிட்டது, பெஸ்ஸியும் மாபிளைப் போலவே அழகுடையவள்தான் என்ற பொழுதிலும், மாபிளிடம் இல்லாத ஒரு குணம் பெஸ்ஸியிடமிருந்தது. மாபிள் ஒரு சாதுபோன்றவள், ஆனால் **பெஸ்ஸியோ**, ஊர் சுற்றிக் கொண்டே திடுக்கிடும் செயல்பல புரிய வேண்டும் என்ற ஆவலின் பிரதி பிம்பம். சுருங்கச் சொன்னால், பெஸ்ஸி, லண்டனின் மறு உருவாக இருந்தாள். மேலும் இருவருடைய நட்பும் வளர்ந்தது; வளர்ந்து கடைசியில் திருமணத்தில் முடிந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், திருமணத்திற்கு லண்டன் உடன்பட்டது, பெஸ்ஸியைக் காதலித்ததால். ஆனால் பெஸ்ஸியோ லண்டனைக் காதலிக்காமலே திருமணத்திற்கு உடன்பட்டாள். ஆம்!; வெறும் நட்பு முறையிலேயே திருமணத்திற்கு உடன்பட்டாள், பெஸ்ஸி. ஆனால் திருமணத்திற்குப்பின், நெருங்கிப் பழகியபோது, பெஸ்ஸி, லண்டனைக் காதலித்தாள் — அளவுக்கு மீறி காதலித்தாள். லண்டன், அவனுக்குத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்த மாபிளை மணக்காததால்மனமுடைந்த லண்டனின் தாயார், லண்டனைவிட்டுப் பிரிந்து தனியே வசிக்க ஆரம்பித்தாள்.

லண்டன்—பெஸ்ஸி வாழ்க்கைப் படகு ஆனந்த வெள்ளத்தில் மிதந்தது. திருமணத்திற்கு அடுத்ததாகவே, லண்டனுடைய மூன்று சிறுகதைகளுக்கு, "மக்லியூர்" என்ற இதழ், 300 டாலர்களை தந்தது. அது பிரசுரமான சில நாட்களுக்குள்ளாகவே, முன்பு ஏற்பாடு செய்தபடி, ஹப்டன் மிப்ளின், லண்டனுடைய சிறுகதைத் தொகுதி ஒன்றை, "ஓநாயின் மகன்" என்ற தலைப்பில், புத்தக உருவாக வெளிக் கொணர்ந்தார். "ஓநாயின் மகன்" புகழ்பெற்ற அமெரிக்கப் பத்திரிகாசிரியர்கள் பலருடைய பாராட்டுக் குரித்தாயது. "ஓநாயின் மகன்" தந்த இலாபத்தைக் கண்ட, "மக்லியூர்" ஆசிரியர், ஒரு முழு நாவல் எழுத, லண்டனுக்கு மாதம் 125 டாலர் வீதம் ஐந்து மாதங்களுக்குத் தர ஒப்புக்கொண்டார், இந்த சமயத்தில் தான், பெஸ்ஸி கர்ப்பிணியானாள். கடைசியில், பெஸ்ஸி, ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அது ஆணாக இல்லையே, என்பதில் லண்டனுக்கு வருத்தம்தான் என்றாலும், நாளடைவில், அப் பெண் குழந்தையிடம் தன் பரிபூர்ண அன்பைச் செலுத்தலானான். லண்டன், அதிகமாகச் செலவு செய்யும் பழக்கத்தை மேற்கொண்டான். கையில் வந்த அவ்வளவு பணத்தையும் செலவழித்துக் கொண்டே இருந்தான். எனவே, கடனும் ஏறிக் கொண்டே வந்தது. வெகு விரைவில், லணடன் 3000 டாலர் கடனாளியாகி விட்டான். இப்பொழுது பெஸ்ஸி, இரண்டாவது தடவையாக. கர்ப்பிணியாய் இருந்தாள். தென் ஆப்பிரிக்காவில் நடந்த போயர் போரைப்பற்றி, நேராகப் பார்த்து, கட்டுரைகள் தீட்டித்தர ஒப்புக்கொண்டு, ஒரு தினசரி பத்திரிகையின் சார்பாக, லண்டன், தென் ஆப்பிரிக்கா சென்றான். வழியில் இங்கிலாந்திலிருக்கும் பொழுதே, ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்று அந்த தினசரி தந்தி அடித்துவிட்டது. ஒன்றும் அறியாத லண்டன், லண்டனிலேயே தங்கி, அதன் ஒரு பாகத்தில் நடந்த கணக்கு வழக்கற்ற கொலை, கொள்ளைகளுக்குக் காரணம் கண்டுபிடிக்க முயன்றான். அந்த முயற்சியில் அவன் மகத்தான வெற்றி பெற்றான். அவனும் கொலைகாரனைப்போல, திருடனைப்போல, அவர்களுடனே, கிழிந்த உடைகளுடனும், காய்ந்த வயிறுடனும் உலவினான், பேசினான், உண்டான், உறங்கினான். அதன் பயன், அவன் ஒரு மகத்தான உண்மையைக் கண்டுபிடித்தான். ஏழ்மை! ஆம்; ஏழ்மைதான், வறுமைதான், வயிற்றுக்கு இல்லையே என்ற கொடுமைதான், அவர்களை கொலைகாரர்களாக, திருடர்களாக, மாற்றிவிட்டிருக்கிறது என்ற புது உண்மை, அவனுக்கு அப்போது தென்படலாயிற்று. அதன் பயன், அவனுக்கு உலகப் பிரசித்தி பெற்றுத் தந்த "தி பீபிள் ஆப் தி அபைஸ்" (The People of the Abyss) என்ற புத்தகம் வெளி வந்தது. ஏழை அழும் கண்ணீர், அது எப்படி எரிமலைபோல்வது என்பதற்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கிவரும் கப்பலோட்டிகளையும் கண்டு களிப்பான். தனக்கென்று ஒரு சிறு கப்பலாவது வாங்கிக் கொள்ள வேண்டும், அதைத் தானே செலுத்த வேண்டும், பிறகு, அதோ அவர்கள் இறங்கி வருகிறார்களே, அதே போல, பெருமிதம் நெஞ்சில் பவனி வர இறங்கி வரவேண்டுமென்று லண்டன், ஒவ்வொரு முறை, துறைமுகத்திற்குப் போகும் பொழுதும் கனவு காண்பான்.

வேலை செய்து வீட்டைக் காப்பாற்றி விட்டு, ஒழிந்த நேரங்களில் புத்தகங்களைப் படித்துக் கொண்டேயிருப்பான் லண்டன். வர வர, ஓய்வே கிடைக்க முடியாத படி வேலை செய்யவேண்டி நேரிட்டது. ஒரு மணி நேர வேலை செய்தால் ஒன்று அல்லது இரண்டு அணுவுக்கு ஈடான தொகைதான் அவனுக்குக் கூலியாகக் கிடைக்கும். எனவே, தன் வீட்டைக் காப்பாற்ற அவன் நாள்தோறும் பதினைந்து, பதினாறு மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்த நிலையிலும் கூட நடு இரவில், மங்கலாக எரியும் சிறு விளக்கைத் தூண்டிவிட்டுக் கொண்டே ஓயாமல் படித்துக் கொண்டேயிருப்பது அவனுடைய வழக்கம். புத்தகங்களுடன் பேசிக் கொண்டிருப்பதில் அவனுக்கிருந்த ஆர்வம் அவ்வளவு அதிகம்!

ஓய்வு நாளாகிய ஞாயிற்றுக் கிழமைகளில் கூட ஜாக்லண்டன் துறைமுகத்திலேயே சுற்றித் திரிந்து கொண்டிருப்பான். இந்த விதமாக, அப்பொழுதைய கடற் கொள்ளைக்காரர்கள் சிலருடைய நட்பு பதினாறு வயது சிறுவனாக இருந்த ஜாக்லண்டனுக்கு ஏற்பட்டது. அவர்கள் வாழ்க்கை முறையைக் கேட்க கேட்க, அவர்களைப் போலவே, தானும் திடுக்கிடும் செயல்களைக் கொண்ட வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற ஆவல் கொண்டான் லண்டன். தான் ஒரு மாதமெல்லாம் நாள் தோறும் 15 மணி நேரம் முதுகொடியப் பாடுபட்டு வியர்வை சிந்த உழைத்து உழைத்து சம்பாதித்ததை விட எண்ணற்ற மடங்கு அதிகமாக, கடற் கொள்ளைக்காரர்கள், ஒருசில நாட்களில் சம்பாதித்ததைக் கண்ட சிறுவன் லண்டன் மிகவும் வியப்புற்றான்.

சில சமயங்களில், லண்டன், மீன் பிடிக்கும் சிறு கப்பல்களில் பணி புரிந்தான். அப்படி வேலை செய்யும் பொழுதே, கப்பலோட்டி ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டிய பல முக்கியமான விஷயங்களையெல்லாம் அறிந்து கொண்டான்.

ஒரு நாள், தன் கொள்ளைக்கார நண்பர்கள் மூலமாக, ஒரு சிறு கப்பல் விலைக்கு வருவதாகக் கேள்விப்பட்ட ஜாக் லண்டன், முன்னர் தன்னை வளர்த்த பிரன்டிஸ் என்ற நீக்ரோ அம்மையாரிடம் சென்று அந்தக் கப்பலை எப்படியேனும் முயன்று வாங்கித் தருமாறு வேண்டிக் கொண்டான். 300 டாலர் விலையில் அதைமுடித்து விடலாம் போலிருந்தது. நீக்ரோ அம்மையாருக்கும் ஆசைதான். ஆனால் அவர்களிடம் இருந்தபணத்தையெல்லாம் சேர்த்துப் பார்த்தாலும் அது 300 டாலர்களுக்குக் குறைவாகவே இருந்தது. வாழ்க்கை பூராவும் சேகரித்து வைத்திருந்ததே அவ்வளவுதான். இருந்த பொழுதிலும், பற்றுக் குறைக்குக் கடன் வாங்கிப்போட்டு அந்தச்சிறு கப்பலை, லண்டனுக்கு, பிரன்டிஸ் வாங்கிக் கொடுத்தார்கள்.

பிரண்டிஸ் வாங்கிக் கொடுத்த சிறு கப்பலை வைத்துக் கொண்டு, பலவிதவழிகளில், சிறுவன், பணம் ஈட்டத் தொடங்கினான். அவனுடன் இருந்த மற்ற மாலுமிகள் அத்தனை பேரும் வயதானவர்கள். இவன் ஒருவன்தான் சிறுவன். என்றாலும் இவனுக்கிருந்த அளவுக்கு மீறிய தைரியத்தையும் சிறந்த ஆற்றலையும் நெஞ்சு உரத்தையும் கண்ட மற்றையோர், இவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மிக மகிழ்ச்சியுடன் முன் வரலாயினர்.

ஸ்பைடர் என்ற ஒரு கீழ்த்தரமான கடற் கொள்ளைக்காரனைத் துணையாகக் கொண்டு, பல முறை லண்டன், கடற் கொள்ளைகளில் கலந்து கொண்டான். அவன் புரிந்த திடுக்கிடும் செயல்களைக் கண்ட, மற்ற கடற் கொள்ளைக்காரர்கள் அவனை மிக மரியாதையாக நடத்தஆரம்பித்தனர். வெகு விரைவில் 'மிகச் சிறந்த கடற் கொள்ளைக்காரன்' என்ற பெயரை லண்டன் அடைந்தான். அனைவரும் அவனைக் கண்டு அஞ்சி நடுங்கினர்.

அவன் கொள்ளையிட்ட பணத்தைக் கொண்டு, பிரண்டிஸ் அம்மையார் தந்த பணத்தைத் திருப்பித் தந்தான். வீட்டிற்கும் அடி
கடி, நிறைய பணம் கொடுக்
ஆரம்பித்தான்.

அவனுடைய நண்பர்கள், அ
வுக்கு மீறிக்குடிப்பவர்கள். தானு
அவர்களுடன் சமம் என்பதை
காட்ட நினைத்த லண்டன், அவ
களைப் போலவே அளவுக்கு மீறி
குடிக்கத் தொடங்கினான். தன
குக் கிடைத்த பணம் அவ்வளவை
யும் குடியிலேயே செலவழிக்கவு
ஆரம்பித்தான். எனவே அவனு
டைய வீட்டிலுள்ள அனைவரு
முழுப்பட்டினி கிடக்கும் ப
சியை மேற்கொள்ள வேண்
நேரிட்டது!

அவ்வளவு தூரம் குடிவெறியி
கிக் கிடந்த பொழுதும், லண்டன்
தன்னிடம் மீந்த பணத்தில் சிந்தி
கத் தூண்டும் சிறந்த பல புத்தக
களை வாங்கிக் கொண்டு இர
வேளைகளில், தன் சிறு கப்பலி
மேல் தட்டில் உட்கார்ந்து கொண்
விடிய விடிய படிப்பானும்.

ஒரு முறை, குடிவெறியில், லண்
டனுக்கும் ஸ்பைடருக்கும் சண்டை
நடந்தது. போதை அதிகமாகி விட
வே, ஸ்பைடர், லண்டனுடையசிறு
கப்பலை அன்று இரவே கொளுத்தி
விட்டான். சாம்பலாயிற்று அந்த
சிறு கப்பல். மறு நாள் காலையில்
லண்டனுக்குப் போதை தெளிந்த
பொழுதுதான், ஸ்பைடர் செய்
நாச வேலையின் முக்கியத்துவத்தை
அவன் உணரலானான். இதுவரை
லாவது, தனக்கென்று சொல்லி
கொள்ள ஒரு சிறு கப்பல் இரு
தது. இப்பொழுது அதுவுமில்லை
என்றாலும், லண்டன், ஸ்பைடனை
ஒன்றும் செய்யவில்லை. வாழ்க்கை
யில் எதையுமே ஒரு பொருட்டாக
மதிக்காத உணர்ச்சி, அந்தச் சிறு
உள்ளத்திலேயே குடியேறி வி
டது. கொஞ்ச நேரம் கவலையுடன்
ருந்து விட்டு, பிறகு "ஹும் இ
போனாலென்ன? வேறொன்று ச
பாதித்துக் கொள்கிறேன்" என்
னும், லண்டன்! என்ன தைரியம்
எவ்வளவு சகிப்புணர்ச்சி!

ஒரு முறை, லண்டன் தன் நண்
பன் ஒருவனின் கப்பலில் நன்றாக
குடித்து விட்டு ஆடியபோது, தன்
னையும் அறியாமல் தண்ணீரில்
விழுந்து விட்டான். மற்றவர்களு
குடி வெறியில் இருந்ததால், அவ
னைக் கவனிக்கவில்லை. ஒரு செ
படவன், லண்டனைக் காப்பாற்றி
னான். அதன் பின்னர் பல ஆண்

ளுக்கு, லண்டன் குடியைத் தாடவேயில்லை.

வெகு நாட்களாக, லண்டனுக்கு ர் ஆசை யிருந்தது, ஸான்பிரான் ஸ்கோ வளைகுடாவையும்கடந்து லகின் மறு பாகத்திற்கு, கப்ப ில் செல்ல வேண்டும்; புயலுக் ும் பெரு மழைக்கும் இடையில், ானே, அக்கப்பலை தைரியத்துடன் சலுத்த வேண்டும், என்ற ஓர் ூவல், தினந்தோறும் அவன் னத்தைப் பிய்த்துத் தின்றது.

அதற்கேற்றாற்போல், "சோபி தர்லாண்ட்" என்ற கப்ப லான்று உலகின் அப்பாகத்திற் குச் செல்ல இருந்தது. அதில் எவ் ளவோ கஷ்டத்திற்கிடையே, ஒரு வலை கிடைத்தது, லண்டனுக்கு! ண்டன் வாழ்க்கை பூராவும் பெரு ம அடித்துக் கொள்ளுமளவுக்கு டுக்கிடும் செயல்கள் புரிந்தது, ந்த "சோபிசதர்லண்"டில்தான். ஒரு முறை, கப்பல், புயல் ஒன் ில் சிக்கிக் கொண்டது. அதிலி ருந்து கப்பலை, தைரியமாக தப்பு த்தது, லண்டனுடைய. திறமை ான். இந்தக் கப்பல் உலகின் பல ாகங்களுக்கும் சென்று ஸான் ரான்ஸிஸ்கோ திரும்பியதும், இனிமேல் சுற்றிக் கொண்டே ிருப்பதில் பயனில்லை, நிலையான ாழ்க்கையைத் தொடங்க வேண் ம்" என்று லண்டன் தீர்மானித் க் கொண்டான்.

நிலையான வாழ்க்கையைத் தாடங்குவதிலுள்ள ஆயிரக்கணக் ான கஷ்டங்களை லண்டன் ப்பொழுது தான் உணர்ந்தான். ப்பொழுதுள்ளதைப் போல, மெரிக்கா குபேரநாடாக இல்லை, ப்பொழுது! எங்கு நோக்கினும் ழ்மையும் வறுமையும் பஞ்சமும். ணியும் கைகோத்துக் கொண்டு லவிய நாட்கள் அவை. எனவே ண்டனுக்கு சுலபத்தில் ஒருவேலை டைக்கவில்லை. எவ்வளவோ யன்று, எங்கெங்கோ சுற்றி லைந்து, இறுதியில் லண்டனுக்கு ரு சணல் ஆலையில், மிகக் றைந்த சம்பளத்தில் ஒரு வேலை டைத்தது.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் பிர த்தி பெற்றிருந்த "அழைப்பு" ன்ற பத்திரிகை, அப்பொழுது ரு கதைப்போட்டி நடத்தியது. ாக் லண்டன், அப்பொழுதுதான் லக்கியத்தைக் கரைத்துக் குடிக் ம் வேலையில் மும்முரமாக ஈடுபட் டிருந்தான். "அழைப்பு" இதழின் கதைப் போட்டியில் பங்கு எடுத்துக்கொள்ளுமாறு அவன் தாய் அவனை மிகவும் வற்புறுத்தினாள். சரி என்று ஒத்துக் கொண்டு, லண்டன், தான், "சோபி சதர்லண்ட்" என்ற கப்பல் புயலில் சிக்கி, தப்பித்த தன் சொந்த வரலாற்றையே "ஜப்பானியக் கடற்கரையில்" என்ற சுவைமிகு கதையாகச் சித்தரித்து, அதனை அழைப்புக்கு அனுப்பினான். அவனுடைய முதல் கதை அதுதான். சொல்லப் போனால், எழுதப் படிக்கக் கற்றுக் கொண்ட பிறகு, அவன் நிறையப் படித்தானே தவிர, காகிதத்தையும் பேனாவையும் எடுத்து எழுதியதே, அதுதான் முதல் தடவை. அந்தச் சிறுகதை முதல் பரிசுத் தொகையான 25 டாலரை ஈந்தது, லண்டனுக்கு. அவன் எழுதிய முதல் கதைக்கு முதல் பரிசு! இதனினும் மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சி வேறென்ன இருக்க முடியும்?

அமெரிக்க இலக்கியத்தில், இன்றும் கூட ஒப்பற்றதோர் உயிரோவியமாகப் போற்றப் படுகிறது, "ஜப்பானியக் கரையில்" என்ற அந்தக் கதை.

அதற்குப் பிறகு, நெடு நாட்கள், லண்டன் ஒன்றுமே எழுதவில்லை. ஆனால் சமயம் கிடைத்தபொழுதெல்லாம், படித்தான் நிறையப் படித்தான்—மிக நிறையப் படித்தான். படித்துப் படித்து, ஓர் நடமாடும் புத்தகமாகவே ஆனான் லண்டன்.

1894-ன் தொடக்கத்தில், ரயில் பாதை அமெரிக்காவில் போடப்பட்ட சில ஆண்டுகளுக்குப்பின்—நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகியது. வேலையில்லாமல் வேதனைத் தீயில் உழன்ற மக்கள் கூட்டம் தலை நகர் நோக்கி, பட்டினிப் பட்டாள அணிவகுப்பினை நடத்தி சென்றது. அமெரிக்கா முழுவதும் "வேலை இல்லாமை" என்ற புயல் சுழன்று சுழன்று வீசிய அந்தக் காலத்தில், லண்டனுக்கு மட்டும் எப்படியோ அந்த சணல் ஆலை வேலை கிடைத்து இருந்த பொழுதிலும், 'சுற்றித்திரிய வேண்டும்' என்ற அவனுடைய மனப்போக்கை, அவனால் கட்டுப் படுத்த முடியவில்லை.

கால் நடையாகவும், ரயிலில் டிக்கெட்டில்லாப் பிரயாணத்தின் மூலமாகவும், லண்டன், நாடு பூராவும் சுற்றி அலைந்தான், தன் வீட்டைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலையில்லாமல்! இப்படிச் சுற்றிய சமயத்தில் தான், அவன் பிற்காலத்தில் எழுதிய ஏராளமான புத்தகங்களுக்கு வேண்டிய 'சரக்கை' தன் மனம் எனும் மாளிகையில் நிரம்பச் சேர்த்து வைத்துக் கொண்டான், லண்டன்.

அவன் சந்தித்த ஒவ்வொருவரின் வாழ்க்கை வரலாறும் ஒவ்வொருவகையில் அவன் உள்ளத்தைக் குலுக்கியது—அதுமட்டுமா-அல்ல அல்ல—அந்த ஒவ்வொரு உண்மை வரலாறும் அவனுடைய ஒவ்வொரு கற்பனைச் சித்திரமாக, பிற்காலத்தில் உருவெடுத்து அமெரிக்க மக்கள் உள்ளத்தைக் குளிர்வித்தது.

கடைசியில் நியூயார்க் சேர்ந்த லண்டன், பிச்சை யெடுத்துப் பிழைக்க ஆரம்பித்தான். பிச்சை எடுத்த பணத்தில் சாப்பாட்டுக்குப் போக மீந்த சொற்ப பணத்தில் கூட அன்றாடப் பத்திரிகைகள் வாங்கிப் படிக்கத் தவறியதில்லை அவன். கடைசியில் ஒரு நாள் சந்தேகத்திற் கிடமானவனாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்டான், போலீசாரால்.

ஒருமாத கால சிறைத்தண்டனை அடைந்த லண்டன், தன்னுடைய ஒழுங்கான நடத்தை மூலம், சிறையில் அனைவரின் நல்லெண்ணத்தையும் கவர்ந்தான்! எனவே சிறை அதிகாரிகள் அவனை, கைதிகளுக்கு உணவு பரிமாறுபவனாக நியமித்தார்கள். உணவு பரிமாறும் பொழுது, அவன் காட்டிய பரிவைக்கண்ட கைதிகள் அவனிடம் தங்கள் தங்கள் சோகக் கதைகளையெல்லாம் மனம் விட்டுக் கூறலாயினர். ஆம் அவனுக்கு, கதையெழுத மேலும் மேலும் மூலப் பொருளை அள்ளி அள்ளித் தரலாயினர் அக் கைதிகள்!

விடுதலை யடைந்த லண்டன், சான பிரான்சிஸ்கோ வந்து சேர்ந்தான். சான் பிரான்ஸிஸ்கோ வந்து சேர்ந்த லண்டன், நாட்டின் நிலையில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கண்டான். "ஜப்பானியக் கடற்கரையில்" என்று முன்னர், தான் தீட்டிய கதையை நினைத்ததும், தான் கூட ஒரு எழுத்தாளனாக முடியும் என்ற உறுதி கொண்டான். ஆனால் ஒரு பட்டம் பெற்றால் தான், தன்னுடைய எழுத்துக்கு மதிப்பிருக்கும்.

என்று கருதிய லண்டன், கல்லூரியில் சேர நினைத்தான். ஆனால் பள்ளிப் படிப்பையே முடிக்காமல் இருந்ததால் பள்ளியில் மீண்டும் சேர்ந்து படித்தான். ஓய்வு நேரத்தில், வேலை செய்து வீட்டையும் காப்பாற்றிக் கொண்டான், ஓராண்டுக்குப்பின், பள்ளிப்படிப்பை வெற்றிபெற முடித்துவிட்ட போதிலும், வறுமைக்கிடையே இனி கல்லூரியில் படிக்க இயலாது என்று கருதிய லண்டன், தன் படிப்புக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தான்.

பள்ளியில் மீண்டும் சேர்ந்து படித்தபோது, தன் பிரிய நண்பனாக இருந்த எட்வர்ட் ஆப்பிள்கார்த் என்பவனின் வீட்டுக்கு லண்டன் அடிக்கடி செல்லுவான். எட்வர்ட்டின் தங்கை **மேபிள்** மீது லண்டன் காதல் கொண்டான். இந்த சமயத்தில்தான், லண்டன், **"பசியும் பட்டினியும் என்னை ஒரு சமதர்மவாதி ஆக்கியதைப்போல மற்ற அமெரிக்கர்களையும் ஆக்கினால், நான் ஆச்சரியப்பட முடியாது"** என்று ஒரு கூட்டத்தில் பேசியதற்காகக் கைது செய்யப்பட்டான்.

சிறையிலிருந்து வந்தபின், லண்டன், பத்திரிகைகளுக்கு வாழ்க்கையின் சிக்கல்களை விவரித்துக் கதைகள் தீட்டி அனுப்பினான். அவனுடைய மிகத்தீவிரமான கருத்துக்களை ஏற்க முடியாத பத்திரிகைகள், அவனுடைய கதைகளைத் திருப்பி அனுப்பிவிட்டன. ஒரு கதை கூட பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப் படவில்லை. அவன், நூற்றுக் கணக்கான கதைகள் எழுதி அனுப்பிக் கொண்டேயிருந்தான்! அவ்வளவும், ஒழுங்காகத் திரும்பி வந்து கொண்டேயிருந்தன!!

இடையில் சோர்ந்துபோய், எழுத்து வேலையை உதறித் தள்ளிவிட்டு தங்கச்சுரங்க வேலைக்குச் சென்றான். அங்கேயும் பயனில்லாததால் வீடு திரும்பினான். இந்த சமயத்தில் தான், அவனுடைய மாற்றாந்தந்தையான ஜான் இறந்து போனார். ஜான் உயிருடன் இருந்தபொழுது கூட, லண்டன்தான் சம்பாதித்துப் போட்டான் என்றபொழுதிலும், ஜான் இறந்தது, குடும்பத்தலைமையையே லண்டன் தலைமீது சுமத்தி விட்டது. மீண்டும் கதைகள் எழுத ஆரம்பித்தான். இப்பொழுது மேபிளை அதிகமாகக் காதலித்தான்.

ஒரு நாள், **ஓவர்லேண்ட் மாத வெளியீடு** என்ற இதழ் அவன் கதையைப் பிரசுரிக்க ஒப்புக் கொண்டது. அதற்கு ஐந்து டாலர் அனுப்புவதாக வாக்களித்தது. (ஆனால் கடைசியில் லண்டன், நேரடியாக சென்றபின்தான்—அதுவும் கதை பிரசுரமான பல மாதங்களுக்குப்பின்—அந்த ஐந்து டாலரும் வந்தது.)

அடுத்த படியாகவே. இன்னொரு வாய்ப்புக் கிடைத்தது; அவனுடைய கதையொன்றை, ஒரு வெளிநாட்டுப் பத்திரிகை ஏற்றுக் கொண்டு, அதற்காக 40 டாலர்களையும் அனுப்பிவைத்தது. அரைப்பட்டினியும் கால்பட்டினியுமாக வாழ்ந்துவந்த லண்டன் பலகதைகளைத் தீட்டினான் அவற்றுள் பல பிரசுரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன, நாளாக ஆக, அவன் எழுத்துத்திறமைக்கும் தீவிர வாதத்திற்கும் மதிப்பு ஏறியது. அவன் கதை எழுத ஆரம்பித்த ஒன்பதாவது மாதத்தில், அவன் ஐந்து இதழ்களில் தொடர்ச்சியாக சிறு கதை

(13-ம் பக்கம் பார்க்க)

சிறந்த நூல்கள்

இராதாமணாளன் எழுதிய சிறந்த சிந்தனைச் சித்திரம்

துளி தேன்	0	8	0
மதம் அவசியமா?	0	3	0

காதல்பித்தன் எழுதிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

காதல் புரிவது எப்படி?	0	6	0

அறிஞர் அண்ணாவின் சொற்பெருக்கைப் பற்றிய அரிய ஆராய்ச்சி நூல்.

அண்ணா பேச்சு—வெற்றி ரகசியம்	0	3	0

நேத்தாஜி பற்றிப் பலர் பலவிதமாகப் பேசும் இந்நாளில் சிறந்த சிந்தனைக் கட்டுரைகள்.

நேத்தாஜி உயிரோடு இருக்கிறார்?	0	3	0

கோரநாதன் எழுதிய சிறந்த கட்டுரை.

கேட்பாரில்லை	0	2	0

நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன் அவர்களின் சிறந்த வானொலிப் பேச்சு.

என் கடன் களிப்பூட்டுதலே	0	3	0
தேவலீலைகள் (அண்ணாதுரை)	0	8	0
மூலபலம் முறிகிறது (,,)	0	8	0
அறநிலையங்கள் ,,	0	6	0
பொருள் ,,	0	4	0
மறுமலர்ச்சி ,,	0	4	0
மகாகவி பாரதியார்	0	6	0

வியாபாரிகட்கு 25% கழிவு செலவு இனும் தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக விலைக்கு தபால் தலைகள் அனுப்பவும்.

கதம்ப மாளிகை

41, செயின்ட் ஜேவியர் தெரு,

ஏழுகிணறு, சென்னை 1.

Edited, Printed and Published by P. G. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelliyan B. A. (Hon